

அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசியத்தர மதிப்பீட்டுக்குழுவால் 'ஏ' மதிப்புப் பெற்றது)

காரைக்குடி

தமிழ்த்துறை

நடத்தும்

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின்


முப்பத்தெட்டாம் கருத்தரங்கம்


விழா மலர்




திருவள்ளுவர் ஆண்டு 2038 வைகாசித்திங்கள்

2007 மே : 19, 20 சனி, ஞாயிறு











கோடி கொடுத்த கொடைஞன்

குடியிருந்த வீடுங் கொடுத்த விழுத்தெய்வம்

பத்மபூஷண்

டாக்டர் வள்ளல் **அழகப்பர்** அவர்கள்

(6.4.1909 - 5.4.1957)

அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி. 35-3

(தேசியத் தரமதிப்பீட்டுக் குழுவால் 'ஏ' மதிப்புப் பெற்றது)

தமிழ்த்துறை

நடத்தும்

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற
முப்பத்தெட்டாம் கருத்தரங்கு

விழா மலர்

மலர்க்குழு

பேராசிரியர் முனைவர் பெ. கன்னியப்பன்
துணைவேந்தர்

முனைவர் இரெ. தண்டபாணி
பதிவாளர்

முனைவர் மு. பாண்டி
தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை
இணைப்பேராசிரியர்

முனைவர் சு. இராசாராம்
இணைப்பேராசிரியர்

திரு. மு. நடேசன்
விரிவுரையாளர்

முனைவர் மு. சுதா
விரிவுரையாளர் (லீன்)

முனைவர் இரா. தாமோதரன்
விரிவுரையாளர்

திருமதி கரு. ஜெயா
இளநிலை உதவியாளர்

திருவள்ளுவராண்டு - 2038 வைகாசித் திங்கள்
2007, மேத்திங்கள் 19 சனி, 20 ஞாயிறு

35-3

ஒரு சொல்

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற வைரவரிக்குச் சொந்தமான மண். கணியன் பூங்குன்றனார், ஒக்கூர்மாசாத்தியார், மருது சகோதரர்கள், சேதுபதி மன்னர்கள், வள்ளல் அழகப்பர், அண்ணாமலை அரசர், கல்விக்கடல் தியாகராச செட்டியார், பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், கவியரசு கண்ணதாசன், கம்பனடிப்பொடி சா.கணேசன், தமிழ்க்கடல் ராய. சொக்கலிங்கம், மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார் என எண்ணற்ற பல்திறச் சான்றோரை ஈன்று புறந்தந்து சான்றோன் எனக் கேட்கும் மண். பேரா. தேசிகனார், கவிஞர் பூ. அமிர்தலிங்கனார் பேரா. சாரங்கபாணி எனத் தமிழ்ச் சான்றோர் பணியாற்றிய பூமி. காந்தியடிகள், பண்டிட் ஜவகர்லால் நேரு, அறிஞர் அண்ணா, கருமவீரர் காமராசர் எனச் சமுதாயச் சிற்பிகள் பலராலும் விரும்பிநேசித்துத் தரிசிக்கப்பெற்ற மண். தமிழ்த்தாத்தா உ.வே.சா, மகாகவி பாரதியார், யாழ்ப்பாண ஆறுமுகநாவலர், பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோர் தமிழ்த்தொண்டுக்குத் துணைநின்ற நகர். கோயில்கள் அடிப்படையில் குடிகள் பிரிந்துவாழும் 'செட்டிநாடு' என்று அன்புடன் அழைக்கப்பெறும் பகுதியை உடைய மண். கடல் கடந்து வாணிகம் செய்து பொருளீட்டி, 'கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதும் குறைகொடாஅது' வாக்குச் சுத்தம் நிறைந்த தனவணிகம் நிகழும் பகுதி. ஒன்றாம் வகுப்பு முதல் உயர்கல்வி வரை ஏன் உயர் அறிவியல் ஆராய்ச்சியையும் (CECRI) ஒரு குடைக்கீழ் அமைத்துக் கொண்டுள்ள அற்புத பூமி. ஆம் (சிவ+கங்கை) சிவகங்கை சீமையிலுள்ள காரைக்குடிப் பகுதி.

அறிஞர்கள் தொ.பொ. மீனாட்சிசுந்தரன், மு, வரதராசன், வ.சுப. மாணிக்கம், தா.ஏ. ஞானமூர்த்தி, ச. அகத்தியலிங்கம், செ.வை. சண்முகம், க.ப. அறவாணன், தமிழண்ணல், ஆறு. அழகப்பன், சிற்பி. பாலசுப்பிரமணியம், சிலம்பு நா. செல்வராசு, ஒய். டென்னிசன், பெ. சுபாசு சந்திரபோசு ஆகியோரால் கட்டமைத்துக் கட்டிக்காக்கப்பெற்ற இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் கருத்தரங்கம் 37-ஆண்டுகளாகத் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றது. 1996-இல் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற இருபத்தேழாம் கருத்தரங்கைச் சிறப்பாக நடத்திய அழகப்பா பல்கலைக்கழகத்தில், தற்பொழுது 38-ஆம் கருத்தரங்கம் நிகழ்வதை எண்ணி மெத்த மகிழ்கிறோம்.

இக் கருத்தரங்கம் சீரும் சிறப்புமாக நிகழ எல்லா வகையிலும் எங்களை ஊக்கப்படுத்தி, பல்லாற்றானும் உதவிவரும் எம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் பெ. கன்னியப்பன் அவர்களையும், பதிவாளர் முனைவர் இரெ. தண்டபாணி அவர்களையும், ஆட்சிக்குழு உறுப்பினர்களையும் இங்கு நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறோம். மற்றும் பல்கலைக்கழகத்தில் பல்வேறு உயர்பதவிகளில் உள்ள அதிகாரிகள், அலுவலக நண்பர்கள், தமிழ்த்துறை ஆசிரியப் பெருமக்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் என அனைவரின் உதவியால் தான் இந்தக் கருத்தரங்கம் சிறப்புடன் நிகழ்கின்றது. துறைகள், கல்லூரிகள், மையங்கள், அலுவலகம் தொடர்பான தரவுகள், வாழ்த்துரை என எல்லாவற்றையும் கேட்டதும் கொடுத்துதவிய நல்நெஞ்சங்களுக்கும், அண்ணா அச்சகத்தார்க்கும் எங்களின் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

பதிப்புக்குழு சார்பில்
முனைவர் மு. பாண்டி
தமிழ்த்துறைத் தலைவர்
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-3.

உள்ளுறை

வாழ்த்தும் உள்ளங்கள்

முனைவர் பெ. கன்னியப்பன்,
துணைவேந்தர்
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி - 630 003.



வாழ்த்துரை

வள்ளல் அழகப்பர் திருப்பெயரில் அமைந்துள்ள அழகப்பா பல்கலைக்கழகம் தலைசிறந்த இந்தியப் பல்கலைக்கழகங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. இப்பல்கலைக் கழகத்தின் தொன்மையான துறைகளில் ஒன்றாகவும், தலைசிறந்த தமிழ்ச் சான்றோர்களின் வழிகாட்டுதலுக்குரியதாகவும் திகழ்ந்துவரும் துறை தமிழ்த்துறை. மரபு சார்ந்த பாடப்பொருள்களைக் கற்பிக்கும், ஆய்வுக்கு உட்படுத்தும் துறைகளின் வழியாகத்தான் நம்முடைய பழம்பெருமைகளை மேலும் மேலும் மீட்டெடுக்க இயலும். அவ்வகையில் காரைக்குடி வட்டார மண்ணின் பெருமையை வெளிக்கொணரும் வகையில் 'கோயில் ஆய்வை' விருப்பப் பாடமாகவும் திட்டக்கட்டுரைக்குரியதாகவும் தெரிவு செய்துள்ளது இங்குச் சுட்டிக் காட்டத் தக்க ஒன்று. பேச்சாளர்களாகவும், இலக்கியப் படைப்பாளர்களாகவும் திகழ்கின்ற நிலைக்கு அப்பால் ஏனைய ஆய்வுத் துறைகளைச் சேர்ந்தோர் போன்றே தமிழ்த்துறையினரும் ஆய்வுக் கட்டுரைகளை எழுதுதல் வேண்டும் என்ற ஓர் உயர்ந்த சிந்தனையின் அடிப்படையில் அகில இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் என்ற ஒன்று தோற்றுவிக்கப் பெற்றுள்ளதும், அவ்வமைப்பு ஆண்டுதோறும் கருத்தரங்குகளை நிகழ்த்தி வருவதும் நினைந்து நினைந்து போற்றுதற்குரியன. இந்த ஆண்டு இந்தியப் பல்கலைக்கழகத் தமிழசிரியர் மன்றத்தின் முப்பத்தெட்டாம் கருத்தரங்கை நம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடத்துவதும் குறிப்பாக இளைய தலைமுறையினர் நிறைந்துள்ள தமிழ்த்துறையினர் சிறப்பாகவும் ஆர்வத்துடனும் நடத்துவதும் மிக்க பாராட்டுக்குரியன. இக்கருத்தரங்கம் சிறப்புடன் நிகழ என் இனிய வாழ்த்துகளும் இறைவேண்டலும்.

வாழ்த்துக்களுடன்

பெ.கன்னியப்பன்

வள்ளல் திருமகள்
டாக்டர் (திருமதி) உமையாள் இராமநாதன்
வாழ்நாள் ஆட்சிக்குழு உறுப்பினர்
அழகப்பா பல்கலைக்கழகம்
தலைவர், அழகப்பா அறநிலை
காரைக்குடி-3.



15-5-2007

வாழ்த்துரை

எந்தையார் வள்ளல் அழகப்பரின் கல்விக் கொடையால் காரைக்குடி வள வாழ்வு பெற்றுச் சிறப்படைந்து வருகிறது. அழகப்பர் கல்விக்கென அள்ளியள்ளிக் கொடுத்திருந்தாலும் அவர் தமிழ்மீது ஆராக்காதல் கொண்டு பல்வேறு கொடை செய்துள்ளார். என் திருமணத்தின் போது திருவாங்கூர்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையைத் தோற்றுவிக்க வள்ளல் ஓர் இலட்சம் ரூபாய் வழங்கினார். அன்று திறந்த ஊற்றுக்கண் கொடையாறாகப் பெருகி வளம் சேர்ந்தது. தமிழ்க் கலைக்களஞ்சியம் வெளியிடப் பெரும் நிதி நல்கினார்.

தமிழ்ப் பணிகள் செய்த தந்தையார் தமிழ்ப் பாட்டுக்களையும் இலக்கியங்களையும் கேட்பதில் பேரார்வமுடையவர். தமிழ்க்கடல் இராய. சொ., சொ. முருகப்பா போன்றோருடன் உரையாடி இலக்கியத்தைச் சுவைப்பார். தான் தோற்றுவித்த கல்லூரியில் தமிழாராய்ச்சித் துறையைத் தொடங்க வேண்டும் என்றும் விரும்பினார். அவரின் எண்ணப்படித் தமிழிலக்கிய வளர்ச்சியில் அழகப்பா பல்கலைக்கழகம் தனியிடம் பெற்று வளர்ச்சி பெற்றது மிக்க மகிழ்ச்சிக்குரியது.

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் கருத்தரங்கம் 1996 இல் நடைபெற்றது. இப்போது 2007 இல் மீண்டும் நடைபெறுவது வரவேற்கத்தக்கது. கருத்தரங்கம் எல்லா வகையாலும் சிறப்புற நடைபெற என்னுடைய வாழ்த்துக்கள்

மிக்க அன்புடன்

உமையாள் இராமநாதன்

முனைவர் இரெ. தண்டபாணி,
பதிவாளர்
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி - 630 003.



வாழ்த்துரை

என்றுமுள தென்றமிழ் செம்மொழி எனும் மதிப்பைப் பெற்றிருக்கும் இத்தருணத்தில் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் முப்பத்தெட்டாம் கருத்தரங்கினை அழகப்பா பல்கலைக்கழகம் நடத்துவது மிக்க மகிழ்ச்சியளிக்கிறது. கருத்தரங்க விழா மலர் பல்கலைக்கழகத்தின் அனைத்து அங்கங்களையும் தாங்கியிருப்பது பாராட்டுக்குரியதாகும். தமிழகத்தில் தமிழ் முதுகலையுடன் கோயிற்கலையையும் இணைத்து நடத்தும் ஒரே துறையான தமிழ்த் துறை தமிழுக்கு ஆற்றிவரும் தொண்டுகளில் ஒன்றான இக்கருத்தரங்கம் எல்லா நிலைகளிலும் சிறப்புற எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்த்துக்களுடன்.....

(இரெ. தண்டபாணி)



பேரா. முனைவர் வெ. மாணிக்கவாசகம்
தேர்வாணையர்

வாழ்த்துரை

ஆன்மீகத்தையும், தமிழையும் இரு கண்களாகப் போற்றும் செட்டிநாடு தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதய்யர், மகாகவி பாரதி, பாவேந்தர் பாரதிதாசன் போன்ற தமிழ்வளர்த்த பெருமக்களை அழைத்து ஆதரித்த பூமி. கவியரசர் கண்ணதாசன், தமிழ்க்கடல் இராய. சொ., பண்டிதமணி கதிரேசன் செட்டியார், கம்பன் அடிப்பொடி ச. கணேசன், மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார் போன்ற பெருமக்கள் தமிழ்வளர்த்த கல்வி நகரமாம் காரைக்குடியில் அமைந்துள்ள வள்ளல் அழகப்பா பல்கலைக்கழகத்தில் இந்தியப் பல்கலைக்கழகத்தமிழாசிரியர் மன்றம் இரண்டாம் முறையாகக் கருத்தரங்கினை நடத்துவது மிக்க மகிழ்ச்சியளிக்கிறது. பிறதுறை அறிவாலும், பிறமொழி அறிவாலும் பணிபெற்றுப் பதவியில் உயர்ந்து நின்றாலும் தமிழ்மொழி எனும்போது நெஞ்சம் நெகிழத்தான் செய்கின்றது. தாய்மொழியல்லவா! நம் சமுதாயத்தின் தொப்புள்கொடி வரலாற்றை மீட்டெடுப்பதுடன், வருங்காலச் சமுதாயத்தைச் செம்மையுறக் கட்டமைப்பதில் தமிழ்த்துறை ஆய்வுப்போக்கின் பங்களிப்புப் பெரிதாக அமைந்திருக்கின்றது; அமைந்திருத்தல் வேண்டும். கருத்தரங்கம் இனிதே நிகழ என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்.

வாழ்த்துக்களுடன்

வெ.மாணிக்கவாசகம்



திரு. ஆர். பூமிநாதன்
நிதி அலுவலர்

வாழ்த்துரை

காரைக்குடி தமிழன்னைக்குத் திருக்கோயிலமைத்த ஒரே ஊர். செந்தமிழ் வளர்க்கும் செட்டிநாட்டில் அமைந்துள்ள அழகப்பா பல்கலைக்கழகத்தில் சான்றோர் பெருமக்களால் அமைக்கப்பெற்றுள்ள பதின்மூன்று அறக்கட்டளைகள் மூலம் தமிழ்த்துறையில் தமிழ்மணம் கமழ்வதை நன்கறிவேன். இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் முப்பத்தெட்டாம் கருத்தரங்கம் கோடிகொடுத்த கொடைஞன் அழகப்பர் பல்கலைக்கழகத்தில் நிகழ்வது தமிழன்னைக்கு மேலும் பெருமைசேர்க்கும். கருத்தரங்கம் சிறக்க வாழ்த்துக்கள்.

வாழ்த்துக்களுடன்

ஆர். பூமிநாதன்

முனைவர் பேரா. சேது. சுடலைமுத்து
இயக்குநர், தொலைநிலைக்கல்வி இயக்ககம்



வாழ்த்துரை

வள்ளல் அழகப்பர் காட்டிய வழியில் நம்பல்கலைக்கழகத்திலும் தமிழ்த்துறை பீடுநடைபோட்டு நல்வளர்ச்சி பெற்று வளர்ந்து வருகிறது. இத்துறையில் இந்தியத் தமிழாசிரியர்கள் பலர்வந்து கலந்துகொள்ளும் மாபெரும் கருத்தரங்கம் இதற்குமுன் 1996-இல் நடைபெற்றது. அதே இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் முப்பத்தெட்டாம் கருத்தரங்கம் தற்போது மீண்டும் நடைபெறவுள்ளதை அறிந்து பெரிதும் மகிழ்கின்றேன். தமிழ்மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்டிருக்கும் காலகட்டத்தில் கருத்தரங்கம் சிறப்புடன் நிகழவும், கருத்தரங்கை ஒட்டி விழாமலர் சிறப்புடன் அமையவும் எல்லாம்வல்ல இறை துணை நிற்கவேண்டும் என்றும் வேண்டுகிறேன்.

வாழ்த்துக்களுடன்

சேது. சுடலைமுத்து

முனைவர் எஸ். கோகிலவாணி
முதன்மையர், கலைப்புலம்



வாழ்த்துரை

அன்னைத் தமிழுக்குத் தற்பொழுது பொற்காலம். உலகளாவிய உயர்தமிழ் 'செம்மொழி' என்ற மதிப்பைப் பெற்றிருப்பது மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது. அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறை இரண்டாம் முறையாக இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கினை நிகழ்த்துவது தமிழுக்கு மேலுமோர் மணிமகுடமாகும். நானூற்றுக்கும் மேற்பட்ட தமிழறிஞர்கள் அழகப்பா பல்கலைக்கழகத்தில் கூடித் தமிழாய்வது பாராட்டுக்குரியது. கருத்தரங்கம் இனிதே நிகழ என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்,

வாழ்த்துக்களுடன்

எஸ். கோகிலவாணி

முனைவர் அ. இராமகிருட்டிணன்
தனி அலுவலர்



வாழ்த்துரை

வள்ளல் அழகப்பர் பெயரில் அமைந்துள்ள இப்பல்கலைக்கழகம் 1985-ஆம் ஆண்டு தமிழக அரசால் துவக்கப்பெற்று கடந்த 22 ஆண்டுகளில் மாபெரும் வளர்ச்சி பெற்றுள்ளது. இந்தக் காலகட்டங்களில் பல்கலைக்கழகத்திற்கு அபரிமிதமாக உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியப் பல்கலைக்கழகங்களில் NAAC குழுவினரால் 'ஏ' மதிப்பு வாங்கிய 20 பல்கலைக்கழகங்களில் ஒன்றாகத் தென்கோடியில் பின்தங்கிய மக்களுக்கு மகத்தான சேவை புரிந்து வருகிறது. சைனா தேசத்துப் பிள்ளைகள் நம் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி படித்துக்கொண்டிருப்பது மகிழ்ச்சியான செய்தி.

தமிழ்த்துறை தொன்மையான துறை. தமிழ்க்கடல் ராயசொ, மூதறிஞர் வ.சுப.மாணிக்கம் ஆகியோர் இங்குப் பணியாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. உயர்கல்வியில் கற்பித்தல், ஆராய்ச்சிகள் மற்றும் சுற்றுவட்டார மக்களுக்குத் தொண்டு செய்தல் போன்ற பணிகளில் தமிழ்த்துறையின் ஆசிரியர் பெருமக்கள் சிறந்த முறையில் செயலாற்றிவருகின்றனர் என்றால் அது மிகையல்ல.

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் கருத்தரங்கு ஒன்றை ஏற்கனவே நம் தமிழ்த்துறை வெற்றிகரமாக நடத்தியுள்ளது பாராட்டுக்குரியது. மீண்டும் இரண்டாவது முறையாக முப்பத்தெட்டாம் கருத்தரங்க மாநாட்டினைத் (2007 மே) தமிழ்த்துறையினர் செவ்வனே நடத்துகின்றனர். நம்முடைய அன்னைத் தமிழ் மத்தியப் பேரரசினால் செம்மொழியாக்கப்பட்டதும் இந்திய விஞ்ஞான மாநாடு தமிழ் இருக்கை ஒன்றை அழகப்பா பல்கலைக்கழகத்திற்குப் பெருமையுடன் வழங்கியிருப்பதும் இந்த ஆண்டின் சிறப்பம்சங்கள். கருத்தரங்கம் பல பயனுள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுத் தமிழ்மொழிக்கு மேலும் மகுடம் சூட்டிட எடுத்துள்ள முயற்சிகளுக்குத் தொடர்புடைய அனைத்து நல்ல உள்ளங்களையும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். தாய்மொழி நம் கண்கள் போன்றது. பிறமொழிகள் கண்ணாடி அணிவது போன்றவை.

தமிழ்த்தாயை என்றும் தலைசாய்த்து வணங்குவோம்!
இந்தியத் தமிழாசிரியர்களைப் போற்றுவோம்!

வாழ்த்துக்களுடன்

அ. இராமகிருட்டிணன்

காரைக்குடிக் கல்வித்தந்தை
பத்மபூஷண் டாக்டர் வள்ளல் அழகப்பர்
அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள்

குடியிருந்த வீடுங் கொடுத்த கொடை வள்ளல் பத்மபூஷண் டாக்டர் இராம. அழகப்பரின் வாழ்க்கைக் குறிப்பு

மாமனிதர் இராம. அழகப்பச் செட்டியார் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கோட்டையூர் கிராமத்தில் 1909 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் தேதி பிறந்தார். காரைக்குடியில் உள்ள எஸ்.எம்.எஸ்.வித்யாசாலை என்னும் பள்ளிக்கூடத்தில் ஆரம்பக்கல்வி கற்றார். அதற்குப்பிறகு சென்னை மாநிலக் கல்லூரியில் இலக்கியத்தில் முதுகலைப்பட்டம் பெற்றார். இங்குதான் பிற்காலத்தில் இந்தியக் குடியரசுத்தலைவராகத் திகழ்ந்த டாக்டர் திரு. எஸ். இராதாகிருஷ்ணனைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றார்.

தனது 21ஆவது வயதில் இலண்டனில் உள்ள சார்டட் வங்கியில் முதல் இந்தியப் பயிற்சியாளராகச் சேர்ந்தார். அதற்குப்பிறகு இங்கிலாந்து நாட்டின் மிடில் டெம்ப்பிள் என்னும் நகரில் வழக்குரைஞராகத் தகுதி பெற்றார். அதைத் தொடர்ந்து ‘பார் அட் லா’ என்னும் பட்டத்தையும் பெற்றார். செட்டிநாட்டு மக்கள் யாவரும் அவரைப் போற்றினர். இயல்பாகவே வீரதீர குணங்களைப் பெற்றவர். இங்கிலாந்து நாட்டில் ‘கிராய்டன்’ என்னும் நகரில் விமான ஓட்டிக்கான பயிற்சி பெற்று சான்றிதழும் பெற்றார். அதைத் தொடர்ந்துச் சென்னை மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களில் கௌரவ டாக்டர் பட்டங்கள் பெற்றார். வாழ்க்கையில் சிறக்க வேண்டும் என்பதில் அவருக்குத் தணியாத வேட்கை இருந்தது. பிரிட்டிஷ் அரசாங்கம் வள்ளல் அழகப்பர் ஒரு பெரும் வணிக வித்தகராக இருப்பதை உணர்ந்து 1945ஆம் ஆண்டு ‘சர்’ பட்டத்தை அளித்துக் கௌரவித்தது. அவருக்கு அப்போது வயது 37. தாய்நாடு சுதந்திரம் அடைந்த பிறகு இந்த ‘சர்’ பட்டத்தை உதறித் தள்ளினார்.

முதன்முதலாகத் தன் வணிக வாழ்க்கையைத் துணி வியாபாரம் செய்து துவக்கினார்.

மலேசியாவில் ரப்பர் தோட்டங்களை உருவாக்கினார். பர்மாவில் வெள்ளீயத் தாதுப்பொருளைக் கொடுக்கும் சுரங்கங்களைக் கண்டுபிடித்தார். கேரளாவில் துணி ஆலைகளை உருவாக்கினார். கல்கத்தாவில் ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களை உருவாக்கினார். மும்பையில் விடுதிகளை உருவாக்கினார். சென்னையில் திரையரங்குகளை உருவாக்கினார். அத்தோடு நில்லாமல் ஒரு தனியார் மின் விமானப் போக்குவரத்து நிறுவனத்தையும், பங்கு நிறுவனத்தையும் உருவாக்கினார்.

1947ஆம் ஆண்டு தாய்நாடு சுதந்திரம் அடைந்த புதிதில் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கல்வித்துறையில் காலடி எடுத்து வைத்தார். சென்னையில் உடனடியாக ஒரு தொழில் நுணுக்கக் கல்வியைக் கொடுக்கும் கல்லூரியை ஆரம்பிக்க ஒப்புக்கொண்டார். டாக்டர். ஏ. எல். லெட்சுமணசாமி முதலியார் அவர்களின் புகழ்சார்ந்த வழிநடத்துதலோடும் அந்தக் கல்லூரியை நிர்வகித்து வந்தார். அந்தக் கல்லூரி சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது.

வேதியியல் தொழில்நுட்பக் கலையிலும், நெசவுத்தொழில் நுட்பக் கலையிலும், தோல் தொழில் நுட்பக் கலையிலும் இந்தக் கல்லூரி பட்டம் வழங்கி வருகிறது. இதைத் தொடர்ந்து காரைக்குடியில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ஒரு தொடராகப் பற்பல கல்வி நிறுவனங்களை நிறுவினார். ஆரம்ப மற்றும் உயர்நிலைப்பள்ளி கல்வி அளிக்கும் அழகப்பா பள்ளிக்கூடங்களும் இவற்றில் சேரும். அவற்றோடு மட்டுமல்லாமல் அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி, அழகப்பா பொறியியல் கல்லூரி, அழகப்பா கலைக் கல்லூரி, அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, அழகப்பா உடற்பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றையும் துவக்கினார். இவற்றுள் அழகப்பா கலைக்கல்லூரியின் முதுகலைத் துறைகளும் அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் அழகப்பா உடற்பயிற்சி கல்லூரியும் ஒன்றிணைத்து 1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகம் உருவாகியது. இதைத் தமிழக அரசு அங்கிகரித்தது.

இவற்றைத் தவிர ஒரு பொறியியல் கல்லூரியை அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் நிறுவுவதற்குத் தாராளமான நன்கொடையை டாக்டர் அழகப்பச் செட்டியார் ஈந்தார்.

சென்னையில் இயங்கிவரும் கணக்கியல் மேதை ராமானுஜம் கணக்கியல் கழகம் திரு. செட்டியார் அவர்களின் எண்ணத்தில் உருவானது.

மகாத்மா காந்தி அவர்களின் பரிந்துரையின் பேரில் சென்னையில் தக்கர் பாபா வித்யாலயாவைத் தோற்றுவித்தார். இதைத் திரு. மகாத்மா காந்தி அவர்களே திறந்து வைத்தார்.

திருச்சூருக்கு அருகே அழகப்பாபுரம் என்ற ஒரு சிறு நகரத்தை உருவாக்கி அங்கு ஒரு தொழில் நுட்பக் கல்லூரியையும், மகப்பேறு இல்லத்தையும் அமைத்தார். நாட்டு மருந்து ஆராய்ச்சித்துறையை எர்ணாகுளத்தில் இருக்கும் மஹாராஜா கல்லூரியிலும், தமிழுக்காக ஓர் ஆராய்ச்சித்துறையைத் திருவனந்தபுரப் பல்கலைக்கழகத்திலும் தோற்றுவித்தார்.

இவையெல்லாம் அவருடைய ஆழ்ந்த தொலைநோக்கின் பல அம்சங்களாகும்.

இந்திய அரசு அவருக்கு இந்தியக் குடியரசுத் தலைவரால் 1956 ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாள் பத்மபூஷண் விருது வழங்கியது.

இருபதே ஆண்டுகளில், தான் எவ்வளவு பெரிய வணிக வித்தகர் என்பதை உலகிற்குக் காண்பித்தார். வனாந்திரமாக இருந்த காரைக்குடியைத் தொலைநோக்குப் பார்வையுடன் உலகக் கல்வியின் தலைநகரமாக மாற்றிய பெருமை அவரையே சாரும்.

தார்மிகத்துக்கு ஒரு புது விளக்கம் கொடுத்தவர். கல்வியின் மேம்பாட்டிற்காக கைநிறைய வழங்கியவர், இவரைப் போல் கல்விக்காக வழங்கியவர்கள் யாரும் கிடையாது. தனது 48ஆவது வயதில் 1957 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் நாள் இயற்கை எய்தினார். ஆனால் அவர் செய்தளித்துள்ள அறப்பணிகள், தொண்டுகள் இன்றும் நிலைத்து நின்று அவர் புகழ் பரப்புகின்றன.

அண்மையில் நம் நடுவண் அரசு வள்ளல் அழகப்பர் அஞ்சல் தலையை வெளியிட்டு அவர்தம் புகழுக்கு மேலும் பெருமை சேர்த்துள்ளது.

வள்ளல் அழகப்பர் கொடையளித்து உருவாக்கிய அறப்பணிகளில் சில வருமாறு

1. 1943ஆம் ஆண்டு திருவாங்கூர் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை தோற்றுவிப்பதற்காக 1 லட்சம் ரூபாய்.

2. தான் பிறந்த கோட்டையூரில் உயர்நிலைக் கல்விக்கூடம் ஒன்றை நிறுவுவதற்கு 11,000 ரூபாய்.

3. சென்னை வேப்பேரியில் உள்ள மகளிர் தங்கும் விடுதி ஒன்றை நிறுவ ரூபாய் 75,000.

4. கோட்டையூரை மேம்படுத்தி ஒரு சிறு நகரமாக நிர்மாணிக்க ரூ.1,00,000.

5. கண்டனூர் மீனாட்சி கிளப்புக்கு ரூபாய் 30,000.

6. ஹெச்.ஐ.எம்.எஸ்.ஃபண்ட் நிறுவ ரூபாய் 10,000.

7. சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் ஒரு பொறியியல் கல்லூரி நிறுவுவதற்கு 5,00,000 ரூபாய்.

8. சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஒரு தொழில்நுணுக்கக் கல்லூரி நிறுவுவதற்கு 5,00,000 ரூபாய். அதைப் போற்றும் வகையில் சென்னைப் பல்கலைக்கழகம் அந்த நிறுவனத்தை 'அழகப்பச் செட்டியார் காலேஜ் ஆஃப் டெக்னாலஜி' என்று பெயரிட்டது.

9. மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்து வாதாடி மின் வேதியியல் ஆராய்ச்சி நிறுவனத்தைக் காரைக்குடியில் நிறுவச்செய்தது. அவற்றோடு சேர்ந்து ஆரம்ப காலத்தில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பக் கழகத்தின் ஆராய்ச்சி நிறுவனங்களை நிறுவச் செய்தார். அதற்காக 15,00,000 ரூபாய்பெறுமானமுள்ள 300 ஏக்கர் நிலத்தை இலவசமாக அளித்தார். இந்த தர்மத்திற்காக பண்டித ஜவகர்லால் நேரு அவரை 'சோஷலிஸ முதலாளி' என்று அழைத்தார்.

10. மலேசியாவில் உயர்கல்வி நிறுவனங்களை நிறுவுவதற்காக 5,00,000 ரூபாய்.

11. புதுடெல்லியில் 1948ஆம் ஆண்டு தென்னிந்தியக் கல்விக் கழகத்தை நிறுவுவதற்காக ரூபாய் 20,000.

12. மதுரையில் உள்ள லேடி டோக் கல்லூரிக்கு ரூபாய் 25,000.

13. 1946ஆம் ஆண்டு சென்னையில் தக்கர் பாபா வித்யாலயாவில் அழகப்பா மண்டபத்தை நிறுவுவதற்கு 1,17,000 ரூபாய். இதற்கு அடிக்கல்லைத் தேசத்தந்தை மகாத்மா காந்தி நாட்டினார்.

14. தமிழ்க் கலைக்களஞ்சியம் வெளியீட்டுத்துறைக்கு ரூபாய் 10,005.

15. கொச்சின் புயல் நிவாரண நிதிக்கு ரூபாய் 10,001.

16. திருவாங்கூர் அரசின் புவியியல் ஆராய்ச்சிக்காக ரூபாய் 20,000.

17. கொச்சியில் மகப்பேறு மருத்துவமனை, குழந்தைகள் காப்பகம் நிறுவுவதற்கு ரூ.1,00,000.

18. எர்ணாகுளம் மஹாராஜா கல்லூரியில் நாட்டு மருந்து ஆராய்ச்சிக்காக ரூ.30,000.

19. கொச்சி நகரத்து மாணவர்கள் அயல்நாடு சென்று கல்வி கற்க ரூ. 1,00,000.

20. கொச்சி நகரத்து குழந்தைகளுக்குக் காலை உணவுத் திட்டத்திற்காக ரூ. 1,50,000.

21. கொச்சியில் தென்னிந்திய வர்த்தக சபை நிறுவுவதற்கு ரூ. 1,50,000.

அழகப்பர் கண்ட அறநிலையம்

செயலிற் செம்மை
(Excellence in Action)

அழகப்பா பல்கலைக்கழகம் தமிழகத்தில் சிவகங்கை மாவட்டத்தில் ‘தமிழன்னைக்குக் கோயில் அமைத்து தேமதுரத் தமிழோசையை உலகமெலாம் பரவச் செய்யும் கல்விக் கரையிலாக் காரைமாநகரில்’ 420 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. கல்விப் பணியாற்றுதலையே தனது சிறந்த தலையாய குறிக்கோளாகக் கொண்டு, உயர்கல்விக்கு ஆலமரமாய் நின்று விளங்கும் அழகப்பா கல்வி நிறுவனங்கள் பல்துறைப் புலமையும், மிகச்சிறந்த கொடைவள்ளலுமான பத்மபூஷன் டாக்டர் வள்ளல் இராம. அழகப்பச் செட்டியார் அவர்களால் உருவாக்கப்பட்டது. 1985-ஆம் ஆண்டு மேத் திங்களில் தமிழக அரசின் சிறப்புச் சட்ட விதிப்படி, அழகப்பர் கல்லூரியிலிருந்த முதுகலைத் துறைகள் இணைந்துப் பல்கலைக்கழகமாக உருவாக்கியது. இன்று தமிழகத்தின் சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றாக நினைத்துப்போற்றும் அளவிற்கு இப்பல்கலைக்கழகம் வளர்ந்து இந்திய அளவில் ‘ஏ’ மதிப்புப்பெற்ற பல்கலைக்கழகங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

இப்பல்கலைக்கழகமானது கற்பித்தல், ஆய்வுக்கு முக்கியத்துவம் அளித்து ஆய்வை மேன்மையடையச் செய்தல், அனைவருக்கும் கல்வி அளித்தல், கல்வியறிவைப் பரவலாக்கல் மற்றும் சமுதாயத்தோடு தொடர்புடைய கல்விச் செயல்பாடுகளில் ஈடுபடுதல் எனப் பலநிலைகளில் பீடுநடையிட்டு வருகிறது. பல்கலைக்கழகத்தின் குறிக்கோளான ‘செயலிற் செம்மை’ என்பதை அனைத்து நிலையிலும் நிலைநாட்டி வருகிறது.

தமிழக அரசு 2002-ஆம் ஆண்டில் கொண்டுவந்த தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் குறித்த சட்டமானது அழகப்பா பல்கலைக்கழகத்தினை இணைப்புக் கல்லூரிகள் கொண்ட பல்கலைக்கழகமாக மாற்றி அதன் செயல்பாட்டினை விரிவுபடுத்தியுள்ளது. சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள அரசுக் கல்லூரிகள் உள்பட அரசு உதவிபெறும் கலை, அறிவியல் கல்லூரிகளும், மதுரைப் பல்கலைக்கழகத்தின் இணைப்பிலிருந்து மாற்றப்பட்டு அழகப்பா பல்கலைக்கழகக் கட்டுப்பாட்டின் கீழ் இணைக்கப்பெற்றன. மேலும் சுயநிதி கலை அறிவியல் கல்லூரிகளும், சுய நிதிக் கல்வியியல் கல்லூரிகளும் அழகப்பா பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்றுள்ளன. கீழக்கரையில் அமைந்துள்ள தாசிம்பீவி அப்துல் காதர் மகளிர் கல்லூரிக்குத் தன்னாட்சி வழங்கப்பட்டுள்ளது.

அழகப்பா பல்கலைக்கழகமானது 15 பல்வேறுபட்ட துறைகளின் வழியாக உயர்கல்வி வளர்ச்சிப்பணியில் ஈடுபட்டு வருகின்றது. தமிழ், மகளிரியல், கல்வியியல், நிருமச் செயலரியல், உயிரித்தொழில் நுட்பவியல், கடலியல் மற்றும் கடலோரவியல்,

தொழிலக வேதியியல், இயற்பியல், கணிப்பான் அறிவியல், கணிதவியல், மேலாண்மையியல், உடற்கல்வியியல், வங்கி மேலாண்மையியல், வணிகம் மற்றும், பன்னாட்டு வணிகவியல், ஆங்கிலம் மற்றும் அயல்நாட்டு மொழிகள் ஆகிய துறைகளின் வழி முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டங்கள் பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்கிவருகிறது.

தர மதிப்பீடு

தேசியத்தர மதிப்பீட்டுக்குழு அழகப்பா பல்கலைக்கழகத்தைக் கல்வி, ஆய்வு நிலையிலும் மற்றும் உள்கட்டமைப்புகளின் அடிப்படையிலும் மதிப்பீடு செய்து 'ஏ' மதிப்புத் தரம் வழங்கியுள்ளது.

மேதகு குடியரசுத்தலைவர் வருகை

2006 செப்டம்பர் 24-ஆம் நாள் இந்தியக் குடியரசுத்தலைவர் மேதகு டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வருகை புரிந்து மாணாக்கர்களுடன் கலந்துரையாடியது பல்கலைக்கழகத்திற்கு மேலும் பெருமை சேர்க்கக் கூடிய வரலாற்று நிகழ்வாகும்.

மாணவர்களுக்குத் தேசிய விருது

புதுடெல்லியிலுள்ள கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசியக் குழுமம் கல்வியியல் துறையின் ஐந்து மாணவர்களுக்குச் செம்மையான ஆய்வுகளுக்கான தேசிய விருதுகளை வழங்கியுள்ளது.

பல்கலைக்கழக மானியக்குழு நிதி

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவானது பத்தாவது திட்ட மதிப்பீட்டின் கீழ் அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு ஒரு கோடி ரூபாய் வழங்கியுள்ளது. மேலும் காந்தியக் கல்வி மையம் உருவாக்கத்திற்கு 8.2 இலட்சமும், நேரு கல்வி மையம் உருவாக்கத்திற்கு 8.2 இலட்சமும் வழங்கியுள்ளது. பல்கலைக்கழக மேம்பாட்டிற்காகக் கூடுதலாக ரூ. 114.85 இலட்சம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

நிறுவனங்களின் நிதியுதவி

டெல்லியில் அமைந்துள்ள அறிவியல் மற்றும் விஞ்ஞானத் தொழில்நுட்ப வளர்ச்சித் துறையும், அறிவியல் மற்றும் தொழில்துறை வேதியியல் ஆய்வு மையமும், அழகப்பா பல்கலைக்கழகத்தின் இயற்பியல்துறை, வேதியியல் துறை மற்றும் உயிரியல் தொழில் நுட்ப ஆய்வுத்துறை ஆகியவற்றின் பல்வேறு ஆய்வுத் திட்டங்களுக்காக ரூ.110 இலட்சத்தினை அளித்துள்ளன.

மாநில அரசுநிதி

மாநில அரசு 2005-2006 நிதியாண்டில் முழுத் தொகையாக ரூபாய் 55 இலட்சமும், திருப்பிப் பெற்றுக் கொள்ளும் நிதியாக 95 இலட்சமும் வழங்கியுள்ளது. பல்நோக்குக் கலையரங்கம் கட்டுவதற்கான இரண்டாம் மற்றும் இறுதித் தவணைத் தொகையான

ரூபாய் 40 இலட்சத்தை வழங்கியுள்ளது. இதுவரை பல்நோக்கு அரங்கிற்கு ரூபாய் 80 இலட்சமும், மேலாண்மைத் துறையின் மேல்தளம் கட்டுவதற்கு ரூபாய் 10 இலட்சமும் தமிழக அரசு வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகத்தில் பணிபுரிவோர் மற்றும் பயில்வோர்

அழகப்பா பல்கலைக்கழகத்தில் 134 ஆசிரியர்களும் 205 அலுவலர்களும் பணிபுரிகின்றனர். 1225 மாணவர்கள் ஒழுங்குமுறைத் திட்டத்தின் கீழ்ப் பயிலுகின்றனர். பல்வேறு கலைப்புலங்களில் 1424 ஆய்வாளர்கள் முனைவர் பட்டப் படிப்பிற்காகப் பதிவு செய்துள்ளனர். இவர்களுள் 568 ஆய்வாளர்கள் இணைப்புக் கல்லூரிகளில் ஆய்வு மேற்கொள்கின்றனர். 22915 மாணவர்கள் இளங்கலை மற்றும் முதுகலை பயின்று வருகின்றனர்.

அயல்நாட்டிற்கான கல்வித் திட்டங்கள்

பன்னாட்டுக் கூட்டு ஒப்பந்தம்

'பயிற்றிப் பல கல்விதந்து பாரை உயர்த்திட வேண்டும்' என்றான் மகாகவி பாரதி அவன் கண்ட கனவை நனவாக்கியுள்ளது அழகப்பா பல்கலைக்கழகம். சீனா, மலேசியா, நியுசிலாந்து போன்ற உலக நாடுகள் பலவற்றிலும் தனது கல்விக் கிளைகளைப் பரப்பி கல்விக்குக் கரையில என்பதை நிரூபித்துள்ளது. அயல் நாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் கல்வி மற்றும் ஆய்வு நிலையில் புரிந்துணர் ஒப்பந்தம் செய்துள்ளது.

1. ஹர்பின் பொறியியல் பல்கலைக்கழகம் - சீனா
2. ஜி ஜாங் பல்கலைக்கழகம் - சீனா
3. யுன்யாங் ஆசிரியர் கல்லூரி - சீனா
4. மல்டிமீடியா பல்கலைக்கழகம் - மலேசியா

ஆகிய பல்கலைக்கழகங்களுடன் ஆராய்ச்சி,. கல்வி நிலையில் மாணவர் பரிமாற்றம், கருத்தரங்குகள்-கருத்துப்பட்டறைகள்-கருத்து விளக்கக் கூட்டங்கள் நடத்துதல், ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் நூல்களை இணைந்து வெளியிடுதல் போன்ற நிலைகளில் புரிந்துணர் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நியூசிலாந்திலுள்ள 'வைகாட்டாவ்' பல்கலைக்கழகத்தின் இணைத் துணைவேந்தர் பேராசிரியர் சியான்குயிக் அவர்கள் அழகப்பா பல்கலைக்கழகத்திற்குவருகை புரிந்து கல்வி மற்றும் ஆய்வு நிலைகளைக் கண்டறிந்து சென்றுள்ளார்.

வேலைவாய்ப்புக் கல்வித் திட்டங்கள்

உடன்பாட்டுக் கல்வித் திட்டங்கள்

சமூகத் தேவைகளுக்கேற்ப வேலைவாய்ப்பு நல்கக்கூடிய மரபு வழிச் சிறப்புப் பாடத்திட்டங்கள் உடன்பாட்டுக் கல்வித் திட்டம் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி ஷெவாராய் உணவக மேலாண்மை நிறுவனத்தின் உடன்படிக்கையோடு உணவக மேலாண்மை மற்றும் உணவு பரிமாறல் மேலாண்மைப் பாடத்திட்டமும், ஏற்காடு மற்றும் ஊட்டியிலுள்ள ஐஐடியின் உடன்பாட்டோடு நலச் சேவை

மேலாண்மையியல் முதுகலைப் பாடத்திட்டமும் நடைமுறைப்படுத்தப் பெற்றுள்ளன. கதிர்வீச்சு மற்றும் அவசர மருத்துவத் தொழில் நுட்பத்தில் முதுகலைப் பட்டயபடிப்பு வழங்கப்படுகிறது. சென்னையிலுள்ள அப்போலோ நல அறிவியல் நிறுவனம் மதுரையிலுள்ள வடமலையான் நலம்சார் அறிவியல் நிறுவனம் ஆகியவற்றின் உடன்படிக்கையின் மூலம் பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன கோயம்புத்தூரிலுள்ள ஜான்சன் தொழில் நிறுவனத்தின் மூலமாகக் காப்பீட்டு மேலாண்மை என்ற முதுகலைப் பட்டம் வழங்கப்பட்டு வருகிறது. அமெரிக்காவிலுள்ள அழகப்பா கலைகள் அகாதமி மற்றும் சென்னையிலுள்ள டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா நுண்கலைகள் அகாதமி ஆகிவற்றின் உடன்படிக்கையோடு இசை பரதநாட்டியத்தில் சான்றிதழ், பட்டயம் மற்றும் இளங்கலைப் பட்டவகுப்புகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உடன்படிக்கையோடு இசை மற்றும் பரத நாட்டியத்தில் சான்றிதழ், பட்டயம் மற்றும் இளங்கலைப் பட்டவகுப்புகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உடன்பாட்டுக் கல்வித்திட்டத்துறையானது திறமையடிப்படையில் வேலைவாய்ப்பளிக்கும் பல்வேறு சிறப்புப் பிரிவுகளில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டயப்படிப்புகளை நடத்திவருகின்றது.

2005-2006 ஆம் கல்வியாண்டு முதல் இளங்கலை ஒளியியல், கண் தொடர்புடைய சான்றிதழ் மற்றும் பட்டயப் படிப்புகளைச் சென்னையிலுள்ள அகர்வால் கண் மருத்துவமனையுடனும், கோயம்புத்தூரிலுள்ள நேரு விமானப்பயிற்சி கல்லூரியுடனும் இணைந்து அறிமுகப்படுத்தியுள்ளது.

வளாக மேம்பாட்டுத் திட்டம்

அழகப்பா பல்கலைக் கழகம் இளங்கலை மற்றும் முதுகலை பயிலும் இறுதியாண்டு மாணவர்களுக்கான வேலைவாய்ப்பிற்கான நேர்முகத்தேர்வைச் சென்னையிலுள்ள ஆங்கங் அசோசியேட் நிறுவனத்துடன் இணைந்து நடத்தி வருகிறது.

கருத்துப்பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள்

- அழகப்பா பல்கலைக்கழகத் துறைகள் உயர்கல்விக்குத் தேவையான கருத்தரங்குகள், கருத்துப் பட்டறைகள் ஆகியவற்றை நிகழ்த்தி வருகின்றன.
- கல்வியியல் துறை உலகமயமாதலில் உயர்கல்விப் பாடத் திட்டங்களை மறு அமைப்புச் செய்வது என்ற தலைப்பில் மூன்று நாள் தேசியக் கருத்துப் பட்டறையை நடத்தியது.
- அழகப்பா பல்கலைக் கழகத்தின் நாட்டுநலப் பணித்திட்ட மாணவர் பிரிவின் மாநிலப் பிரிவு, நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்களுக்காகத் தலைமைப்பண்புப் பயிற்சி என்ற தலைப்பில் மாநில அளவிலான மூன்று நாள் கருத்துப் பட்டறையை நிகழ்த்தியது.
- இணைப்புக் கல்லூரிகளின் இளையோர் செஞ்சிலுவைச் சங்கத்தின் திட்ட அலுவலர்களுக்கு மண்டல அளவிலான அறிமுகப் பயிற்சி நடத்தியது.

- ஆங்கிலம் மற்றும் ஆங்கில மொழிப் பயிற்றுவித்தலில் மாறி வரும் அணுகுமுறைகள் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நிகழ்த்தியது.
- நிருமச் செயலரியல் என்ற துறை இந்தியா "வெளிநாட்டு வர்த்தகத்தில் எதிர் நோக்கும் நிலைகள்" என்ற தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கம் ஒன்றை நடத்தியது. மேலும் 'மறு அமைப்பு' என்ற பொருளில் தேசியக் கருத்தரங்கு ஒன்றையும் நடத்தியது.
- கணிதவியல் துறை 'அல்ஜிப்ரா' மற்றும் அனிவிட்டி முறைகள் என்ற தலைப்பில் தேசியக் கருத்தரங்கை நிகழ்த்தியது.
- மகளிரியல் துறை பெண் கவுன்சிலர்களுக்கு 'ஆற்றல் மிகுமை' என்ற தலைப்பில் மூன்று நாள் சிறப்பு அறிமுகப் பயிற்சியைத் தமிழக அரசின் நகரப்புற மேம்பாட்டு அமைச்சகத் துணையுடன் அளித்தது.
- மகளிர் சுயஉதவிக்குழு 'சந்தைப்படுத்துதல்' என்ற தலைப்பில் ஒரு நாள் விழிப்புணர்வு முகாமைத் தேசிய ஊரக மேம்பாட்டு வங்கியுடன் இணைந்து நடத்தியது.
- உணவுப்பதப்படுத்தலில் தொழில் முனைவோர் மேம்பாடு என்ற தலைப்பில் ஒரு மாதப் பயிற்சி இந்திய அரசின் உணவுப் பதப்படுத்துதல் தொழில் அமைச்சகத்தின் மூலம் நிகழ்ந்தது.

ஊரக மேம்பாட்டுத்துறை

அழகப்பா பல்கலைக்கழகம் பின்தங்கிய சிற்றூர்கள் சூழ்ந்த பகுதியில் அமைந்துள்ளதால் இப்பகுதியின் முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய கடமையும் பொறுப்பும் பல்கலைக்கழகத்திற்கு உண்டு. ஆதலால் சிற்றூர் மக்களின் மேம்பாட்டிற்காகக் கடந்த ஆண்டு உருவாக்கப்பட்டது ஊரக மேம்பாட்டுத்துறை. பல்கலைக்கழகத்தில் பயிலும் அனைத்து மாணவர்களும் இரண்டாமாண்டில் ஊரக இருத்தல் திட்டம் (Village Placement Programme)என்ற பாடத்திட்டத்தைப் பயிலுகின்றனர். மாணவர்களின் மூலம் கிராமப்புறங்களை மேம்படுத்துவது இதன் தலையாய நோக்கமாகும்.

ஐந்து நாட்கள் மாணவர்கள் கிராமங்களுக்குச் சென்று தங்கி அம்மக்களிடையே கல்வி, சுகாதாரம், மருத்துவ உதவி, தன்மேம்பாடு என அனைத்து நிலைகளிலும் அவர்தம் நிலைகளைக் கண்டறிந்து மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவர். "கிராமங்களே இந்நாட்டின் முதுகெலும்பு" என்பதை நாட்டின் வருங்காலத் தூண்களாகிய மாணவர்கள் உணர வேண்டும் என்பதே இப்பாடத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழகப் பல்கலைக்கழகங்களிலேயே முதலாவதாக இத்திட்டம் மாண்பமை துணைவேந்தர் பெ.கன்னியப்பன் அவர்களின் முழு முயற்சியால் உருவானதாகும், ஊரக மேம்பாட்டுத்துறை மையம் ஒன்றைத் தொடங்கி 40 பேருக்கு 2 சான்றிதழ் பயிற்சி வகுப்புகளையும் நடத்தி வருகிறது. சிவகங்கை மாவட்ட ஆரம்பக்கல்வி மையம் என்ற

ஒன்றையும் தொடங்கியுள்ளது. மகளிரை மேம்படுத்த தையல் மற்றும் ஆடை ஆயத்தப் பயிற்சி 'நபார்டு' என்ற அமைப்பின் மூலம் பெண்களுக்கு வழங்கப்படுகிறது.

சென்னையிலுள்ள 'நபார்டு' என்ற அமைப்பு 125 நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் 5 பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்காக ஊரக மேம்பாட்டுத்துறைக்கு அனுமதியளித்துள்ளது. ஊரக வளர்ச்சிக்கு உதவும் வகையில் அமைந்துள்ள இத்துறையானது மேலும் 16 ஊரக வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தொலைநிலைக் கல்வி

தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின் மூலம் 63 புதிய மற்றும் வேலைவாய்ப்புக் கல்வித் திட்டங்கள் இளங்கலை, முதுகலைப்பட்டம், பட்டயம், ஆய்வியல் நிறைஞர் நிலைகளில் வழங்கப்பட்டு வருகிறது. தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின் மூலம் 2006-2007ல் பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை 63000. தமிழ்ச் சுற்றுலா மேலாண்மைத் துறை, கல்வி மேலாண்மைத் துறை, இயற்பியல், வேதியியல், தொழில்நுட்பவியல், தாவரவியல், விலங்கியல், அரசியல், நிர்வாகவியல், மற்றும் பொருளாதாரவியல் துறைகளில் முதுகலைப் பட்டப்படிப்புகளும் ஆங்கிலத்துறையில் ஓராண்டுப் பட்டப்படிப்பும் 2006-2007 ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன. இக்கல்வி வாய்ப்புகள் அனைத்தும் மத்தியக் கிழக்காசியநாடுகளும், தென்கிழக்காசிய நாடுகளும் பிற நாட்டினரும் பயன்பெறும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்தியா மற்றும் மேலை நாடுகளில் இக்கல்வி முறை பெறும் வரவேற்பைப் பெற்றுள்ளது. அழகப்பா பல்கலைக்கழகத்தின் 17-ஆம் தொலைநிலைக் கல்வித் தொடர்பு மையங்கள் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் அமைக்கப்பட்டுள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தகுந்தது.

கல்லூரி வளர்ச்சிக் குழுமம்

தமிழ்நாடு அரசு 2002-ஆம் ஆண்டின் சட்டம் 35-ன் படி அழகப்பா பல்கலைக்கழகம் இணைப்புக் கல்லூரிகளைக் கொண்ட பல்கலைக்கழகமாக மாறி அதனடிப்படையில் சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள அனைத்துக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் உள் அனுமதி பெற்ற கல்வி நிலையங்களும் அழகப்பா பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் அரசாணை எண். 288 நாள் 16.10.2002-இன் படி இயங்கி வருகின்றன.

அழகப்பா பல்கலைக்கழகம் பின்தங்கிய மாவட்டங்களில் பயிலும் மாணவர்களுக்குத் தேவையான அனைத்துக் கல்வி வசதிகளையும் செய்து தரும் நோக்கிலும் ஆசிரியர் மற்றும் சமுதாயத்திற்கும் வசதி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும்வகையிலும் பல்கலைக்கழக மானியக்குழுவின் அனைத்துத் திட்டங்களையும் செயல்படுத்தும் விதத்திலும் கல்லூரி வளர்ச்சிக் குழுமம் தொடங்கப்பெற்றுச் செயல்பட்டு வருகின்றது.

துணைவேந்தர், முதல்வர்கள் மற்றும் அலுவலகப் பெருமக்களைக் கொண்ட குழுவாக இவ்வளர்ச்சிக்குழுமம் 11.01.2005-இல் தொடங்கப்பெற்றது.

கல்லூரி வளர்ச்சிக் குழுமத்தின் செயல்பாடுகள்

- ✣ அரசு அனுமதி பெற்றுள்ள கல்வி முகமைகளுக்குப் பல்கலைக்கழக இணைப்பு வழங்குவது, புதிய பாட வகுப்புகளுக்கு இணைப்பு வழங்குவது போன்ற பிரதானப் பணிகளைக் கல்லூரி வளர்ச்சிக் குழுமம் மேற்கொண்டு வருகிறது.
- ✣ கடந்த நான்கு ஆண்டுகளில் இணைப்பு வழங்கப்பட்ட கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை-4.
- ✣ இணைப்பு வழங்கப்பட்ட புதிய பாட வகுப்புகளின் எண்ணிக்கை - 10
- ✣ நடப்புக் கல்வியாண்டில் மட்டும் இணைப்பு வழங்கப்பட்ட கல்வியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை-5
- ✣ கல்லூரி வளர்ச்சிக் குழுமமானது பல்கலைக்கழக மானியக்குழுவுக்கும் இணைப்புக் கல்லூரிகளுக்கும் ஓர் இணைப்புப் பாலமாக இருந்து வருகிறது.
- ✣ கல்விப்பாடத்திட்டம் தயாரித்தல், செயல்படுத்துதல், சமுதாயம் மற்றும் மாணவர்கள் நலன் கருதித் திருத்தி அமைத்தல், வேலைவாய்ப்புக்கு உறுதி அளிக்கும் வகையில் பாடத்திட்டத்தை மறுசீரமைத்தல் போன்ற பணிகளைச் செய்து வருகிறது.
- ✣ தகுதியுள்ள ஆசிரியர்களுக்கு ஆராய்ச்சி வழிகாட்டி (Research Guideship) அனுமதியினையும் பல்கலைக்கழகம் வழங்கி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உதவி புரிகின்றது.
- ✣ கடந்த நான்கு ஆண்டுகளில் ஆராய்ச்சி வழிகாட்டி அனுமதி வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை-23
- ✣ ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் ஆய்வுச் செயல்திட்ட கருத்துக்களைப் பல்கலைக்கழக மானியக்குழுவுக்குப் பரிந்துரை செய்து ஒப்புதல் மற்றும் பொருளாதார மான்யம் பெறுகிறது.
- ✣ நடப்புக் கல்வியாண்டில் அனுப்பப்பட்டுள்ள ஆய்வுச் செயல்திட்டக் கருத்துருக்களின் எண்ணிக்கை - 13.
- ✣ ஆசிரியர்களின் பணி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்வதற்காகக் கல்லூரி வளர்ச்சிக் குழுமம் சிறந்த வகையில் ஊக்குவிக்கிறது.
- ✣ மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கெனக் கருத்தரங்குகள் நடத்தி மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்களின் வளர்ச்சிக்கும் கல்லூரிகளின் வளர்ச்சிக்கும் உதவி வருகிறது.
- ✣ கருத்துப் பட்டறைகள் நடத்துதல் மற்றும் பயிற்சி வகுப்புகள் நடத்துதல் போன்ற சிறப்பான செயல்களையும் செய்து வருகிறது.

- வேலை வாய்ப்புத் தரக்கூடிய தரமான நிறுவனங்களை அழைத்து இணைப்புக் கல்லூரி மாணவர்களுக்கு வளாகத் தேர்வு (Campus Interview) நடத்தி அவர்களுக்கு வேலை வாய்ப்பினைப் பெற்றுத்தருகிறது.
- கடந்த இரண்டு ஆண்டுகளில் கல்லூரி மாணவர்களுக்கு M/s. Allsec Tech Ltd., Chennai மற்றும் h/p Sales Ltd., Chennai நிறுவனங்களின் மூலம் பணி நியமனத் தேர்வுகள் நடத்தப்பெற்றுப் பணி நியமன ஆணை வழங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 15
- அழகப்பா பல்கலைக்கழகம் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 24, கல்வியியல் கல்லூரிகள் 5, அனுமதிபெற்ற நிறுவனங்கள் 3, மாலைநேரக் கல்லூரிகள் 3, ஆக மொத்தம் 35 இணைப்புக் கல்லூரிகளைக் கொண்டுள்ளது.
- நாட்டுநலப் பணித்திட்டம், விளையாட்டு, நுண்கலைத்திறன் ஆகியவற்றைக் கல்லூரி மாணவர்களிடத்தில் ஊக்குவிக்கும் பொருட்டு ஒருங்கிணைப்பாளர்களை நியமித்து மாணவர்களின் தனித் திறமைகளை வளர்த்து வருகிறது.

தேர்வுப்பிரிவு

பல்கலைக்கழகத்தின் உயிர்நாடிகளுள் ஒன்றான தேர்வுப்பிரிவு தெளிவாகவும், விரைவாகவும் குறிப்பிட்ட காலத்துக்குள் முடிவுகளை வெளியிடுதலையும் தேர்வுநிலையில் உயர்ந்தநிலையை அடைதலையும் தனது நோக்கமாகக் கொண்டமைந்தது. பல்கலைக்கழகத் துறைகளுக்கான பிரிவு என நான்கு பிரிவுகளுடன் தன் பணியைச் செவ்வனே ஆற்றிவருகிறது.

விருப்பஞ்சார் (CBCS) பாடத்திட்ட முறையானது 2004-05 கல்வியாண்டில் அனைத்து முதுநிலைக் கல்விகளுக்கும் உரியதாக்கப்பட்டது. 2002-03 கல்வியாண்டில் சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டக் கல்லூரிகள் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திடமிருந்து மாற்றப்பட்டு அழகப்பா பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளாயின. ஏறக்குறைய ஒரு இலட்சம் மாணவர்களை உள்ளடக்கிய நூற்றுக்கும் மேற்பட்ட அழகப்பா தொலைநிலைக் கல்வி மையங்களுடன் சிறந்த முறையில் தொடர்புகொண்டு தேர்வுகளைச் செம்மையாக நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழக வளர்ச்சியில் தேர்வுப்பிரிவின் பணிகள் மகத்தானதும் போற்றத்தக்கதுமா.

வளாகப் பிரிவு

தலைவர் : முனைவர் அ.இராமகிருட்டிணன்

அழகப்பா பல்கலைக்கழகம் 1985 -ஆம் ஆண்டு ஜூலை மாதம் துவங்கப்பட்டு கடந்த 22 ஆண்டுகளில் உள்கட்டுமான வசதிகளில் மாபெரும் வளர்ச்சி கண்டுள்ளது கண்கூடு. அழகப்பர் கல்வி அறக்கட்டளைச் சொத்துக்களான 26,000 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட பழைய கட்டடங்களுடன் 430 ஏக்கர் நிலத்தை அழகப்பா பல்கலைக்கழகம் உருவாக்கத் தமிழக அரசு அளித்தது. முதல் துணைவேந்தரான திருமதி இராதா தியாகராஜன் அவர்கள் ஆறு ஆண்டு காலம் உள்கட்டமைப்பு

வசதிகளுக்கு அடித்தளமிட்டார்கள் என்பது குறிப்பிட வேண்டிய செய்தியாகும். நான்கு துறைகளையும், இரண்டு இணைப்புக் கல்லூரிகளையும் கொண்டு ஆரம்பிக்கப்பெற்ற அழகப்பா பல்கலைக்கழகம் ஆல்போல் தழைத்து வளர்ந்து கிளை பரப்பியுள்ளது. 2005-ஆம் ஆண்டு தற்போதைய துணைவேந்தர் முனைவர் பெ.கன்னியப்பன் அவர்களின் சீரிய முயற்சியால் தேசியத் தர மதிப்பீட்டுக்குழுவின் (NAAC) 'ஏ' மதிப்புப்பெற்றது பல்கலைக்கழக வரலாற்றில் குறிப்பிடத்தக்கது.

சாலைகள், சுற்றுச்சுவர், கட்டடங்களைப் புதுப்பித்தல் போன்ற வேலைகள் அனைத்தும் அவசரமாகவும் அவசியமாகவும் குறிப்பிட்ட காலத்தில் செய்யப்பட்டன என்பது பெருமைக்குரிய செய்தியாகும். கதவுகள், சாளரங்கள், மேசைகள், நாற்காலிகள் மற்றும் வகுப்பறைத் தளவாடங்கள் அனைத்தும் சரிசெய்யப்பட்டு மாணவ மாணவிகள் பயன்பெறும் வகையில் புதிய பொலிவுடன் தற்போது வளாகம் திகழ்கின்றது. புதிய கட்டடப் பணிகள் கடந்த மூன்று ஆண்டுகளில் 350 லட்சம் தொகைக்கு முடிக்கப்பெற்று அந்தந்தத் துறைகளுக்குச் செவ்வனே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வள்ளல் அழகப்பர் நினைவாலயத்திற்கு ஏழு இலட்சம் செலவில் ஒரு கட்டடம் 65 நாட்களில் அழகாக நிர்மானம் செய்யப்பட்டுள்ளது என்ற செய்தியும் பல்கலைக்கழக வரலாற்றில் பொறிக்க வேண்டிய ஒன்றாகும். மத்தியப் பேரரசின் நிதி அமைச்சர் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்கள் இதனைத் திறந்து வைத்தார்கள். வளாக நுழைவு வாயில், பத்து இலட்சம் தொகையில் கனரா வங்கியின் துணை கொண்டு கட்டப்பட்டு மேதகு அளுநர் அவர்களால் திறக்கப்பெற்றது என்பது மற்றுமொரு மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

மாணவர், ஆசிரியர்கள் அலுவலர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் உற்பத்தி நிலையம் நிறுவப்பட்டு அன்றாடம் அனைத்து இடங்களுக்கும் அனுப்பப்படுகிறது என்பது மேலும் ஒரு சிறப்பான செய்தியாகும்.

பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா அரங்கம் ஒன்று இல்லாமல் இருந்தது. இக்குறையைப் போக்க பல்நோக்குக் கலையரங்கம் (Multi Facited four in one) ஒன்று ரூ.350 இலட்சம் செலவில் நேர்த்தியாகக் கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. பிரதானக் கலையரங்கத்தில் 1200 பேர் அமரலாம். 400 பேர் தேர்வு எழுதவும் 400 ஆசிரியர்கள் விடைத்தாள் திருத்தவும் இந்த அரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. சிறிய குளிரூட்டப்பெற்ற கலையரங்கம் ஒன்று இதன் அடிப்பகுதியில் 200 பேர் அமரக்கூடிய வகையில் சிறப்பாக அமைக்கப்பெற்றுள்ளது. 300 டன் தாள்கள், புத்தகங்கள் வைக்கக்கூடிய அளவிற்கு ஒரு சேமிப்புக் கிடங்கு அழகாக இதனடியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 24 மணி நேரமும் இயங்கக்கூடிய கணினி மையம் குளிரூட்டப்பெற்ற வசதியுடன் மாணவ மாணவிகளுக்கு மேடைக்குக் கீழே மிக அழகுடன் அமையப்பெற்றுள்ளது. ஆண், பெண் இருபாலருக்கும் தேவையான கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. மிகப்பெரிய விழாக்கள் இனித் தொடர்ந்து இக்கலையரங்கத்தில் நடக்க

வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பது அனைவர்க்கும் மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும்.

மத்திய அரசின் நிதிஅமைச்சர் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்கள் தனது தந்தையார் திரு. பழனியப்பச் செட்டியார் அவர்கள் பெயரில் அவர்களின் சொந்த அறக்கட்டளை மூலமாக நினைவுக் கலையரங்கம் கட்ட 350 இலட்சம் தொகையைத் தந்துள்ளார். நினைவுக்கலையரங்கம் அழகுடன் அமைக்கப்பெற்று முடியும் தருவாயில் உள்ளது. நமது நாட்டின் சிறந்த கட்டுமான ஆலோசகர்களில் (Structural Consultant) ஒருவரான பெங்களூரைச் சேர்ந்த ஆர்க்கிடெக்ட் திரு. கருணாகரன் அவர்கள் கைவண்ணத்தில் பல்கலைக்கழகக் கட்டுமானக் குழுவைச் சேர்ந்த சிறந்த பொறியாளர்கள் இரவு பகலாக உழைத்துச் சீரிய முறையில் தரத்தோடு கட்டிவருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏறத்தாழ 15,000 சதுர மீட்டர் பரப்பளவில் புதிய கட்டடங்கள் தற்போது எழுப்பப்பட்டு வருகின்றன. இவையனைத்தும் 2007-ஆம் ஆண்டிற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 11-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏறத்தாழ 1500 இலட்சத்திற்குப் புதிய கட்டடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. குறுகிய காலத்தில் இவ்வளவு அபரிமிதமான வளர்ச்சி பெற தமிழக அரசு, உயர்கல்வி அமைச்சர், உயர்கல்விச் செயலாளர், துணைவேந்தர் ஆட்சிக்குழுவினர் ஆகியோரின் வழிகாட்டுதல் தான் காரணம் என்றால் அது மிகையல்ல.

உள்கட்டமைப்பு வசதிகள் மிக வேகமாக அமைக்கப்பெற்று இனி வருங்காலத்தில் அழகப்பா பல்கலைக்கழகத்தின் தரம் மேலும் உயர்ந்து பின்தங்கிய மாவட்டத்தில் உள்ள இந்தப் பகுதி மக்களுக்கு மாபெரும் பயன்தரும் என்பதில் ஐயமில்லை.

மைய நூலகம்

நூலகர் : பேரா. முனைவர். எஸ்.அண்ணாமலை

அழகப்பா பல்கலைக்கழகத்தின் மையநூலகம் 1990 ஜுலை 23-இல் பல்கலைக்கழக இணைவேந்தர் க.அன்பழகன் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது. பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களுக்குரிய எழுபது ஆயிரம் நூல்களும், ஐந்தாயிரம் அரிய தமிழ் நூல்களும், எண்பது தேசிய கீதங்களும், இருபது சர்வதேச இதழ்களும், ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட மென்தட்டுகளும் இந்நூலகத்தில் உள்ளன. பிறதுறை குறித்த அறிவு வளர்ச்சிக்கான அனைத்துச் செய்திகளையும் அறிந்து கொள்ள உதவும் அறிவுச் சுரங்கமாக விளங்கும் இந்நூலகம் பல்கலைக்கழகத்திற்குப் பெரும் புகழ்சேர்ப்பதாக அமைந்துள்ளது. இன்றைய நிலையில் இந்நூலகத்தில் அனைத்து வசதிகளையும் பெருக்கி மாணவர்கள் பயனடையும் வகையில் நவீன முறையில் குளிரூட்டப்பட்ட படிக்கும் அறை, அழகான உள்கட்டமைப்பு, கணினி, இலவச இணையத்தள வசதி என அடிப்படை வசதிகளைப் பெருக்கியுள்ளது. பல்கலைக்கழகத்தின் இதயமாக விளங்கும் நூலகத்தில் துணைவேந்தரின் உதவியால் குளிரூட்டப்பட்ட படிப்பறை (Air-Conditioned Reading

Hall) UGC Infonet மூலம் VSAT இணைப்பு பெற்று 4300க்கும் மேற்பட்ட இதழ்களைக் கணிப்பொறிகள் மூலம் காணும் வசதி, குளிரூட்டப்பட்ட இணையத்தள மையத்தில் 45 கணிப்பொறிகள் மூலம் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் அலுவலர்களும் இணையதளத்தை இலவசமாக உபயோகப்படுத்தும் வசதி, பார்கோடு (Barcode) மூலம் அனைத்து நூல்களும் கணிப்பொறிகளில் பதிவு செய்து மாணவர்களுக்கு நூல்கள் வழங்கும் சேவை ஆகியன அளிக்கப்படுகின்றன.

பல்கலைக்கழக மைய நூலகத்தில் நூல் வழங்கும் பிரிவு, பருவ இதழ்ப் பிரிவு, தொழில் நுட்பப்பிரிவு, குறிப்புநூல் பிரிவு, ஆராய்ச்சிக் கட்டுரைப்பிரிவு, நூலக அறை இணையதளம், மாணவர்கள் சேவை மையம், நாளிதழ்ப் பிரிவு, பார்வையற்றோர் நூலகம் (Talking Book Library) போன்ற அரிய சேவைகள் வழங்கப்படுகின்றன. அறிவென்னும் கோயிலின் நுழைவு வாயில் ஒரு சிறந்த நூலகமே என்பதை உணர்ந்து அறிவுச்சுடர் பெருகும் வண்ணம் நூல்களையும், நூலகத்தையும் பேரளவில் உயர்த்திய பெருமை சிறப்புமிகு துணைவேந்தர் பெ.கன்னியப்பன் அவர்களையே சாரும்.

அழகப்பா பல்கலைக்கழக இணைவுக்கல்வித் திட்டம்

அழகப்பா பல்கலைக்கழகத்தின் கல்வித் திட்டப் பரிமாணங்களில் ஒன்றாக இணைவுக் கல்வித் திட்டம் (Collaborative Programmes) 2002-2003 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. வேலைவாய்ப்புக்கு உடனடியாக உறுதி அளிக்கத்தக்க வகையில் புதுவகையாகச் சிறப்புப் பாடங்களை அளிப்பதற்கு வசதியாக உள்கட்டமைப்பு மற்றும் தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டுள்ள தனியார் பயிற்சி நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு இவ்வகையான பாடத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தகுதிவாய்ந்த கல்வி நிறுவனங்களைப் பல்கலைக்கழக ஆய்வுக்குழுவினர் சென்று ஆய்வு செய்து அவர்களது பரிந்துரையின்பால் ஆட்சிக் குழுவினர் ஒப்புதல்பெற்று அந்த நிறுவனங்கள் பல்கலைக்கழக இணைவுக் கல்வித் திட்ட நிறுவனங்களாகச் செயல்பட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

பல்கலைக்கழக இணைவுக் கல்வித்திட்டத்தின் கீழ்த் தற்பொழுது உடனடி வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய வகையில் ஹோட்டல் மேனேஜ்மெண்ட், டெக்ஸ்டைல்ஸ் மற்றும் பேசன் டிசைன், பாரா மெடிக்கல்ஸ், நாட்டிக்கல் மற்றும் ஏரோ நாட்டிக்கல் சயின்ஸ் பாடப்பிரிவுகளில் இளங்கலை, முதுகலை, சான்றிதழ்ப் பட்டய மற்றும் முதுநிலை பட்டயப் படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் ஹோட்டல் மேனேஜ்மெண்ட், டெக்ஸ்டைல்ஸ் மற்றும் பேசன்சோ, பாராமெடிக்கல், நாடிக்கல்ஸ், ஏரோநாடிக்கல் அறிவியல், இன்சூரன்ஸ் மேனேஜ்மெண்ட் மற்றும் பைன் ஆர்ட்ஸ் போன்றவற்றைப் படிக்கும் மாணவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்புக் கிடைக்கும் நிலையுள்ளது.

தற்பொழுது பல்கலைக்கழகத்தில் 35 நிறுவனங்கள் இணைவுக் கல்வி நிறுவனங்களாகச் செயல்பட்டு வருகின்றன. இணைவுக் கல்வித்திட்ட நிறுவனங்களில்

மாணவர்களுக்கு நேரடிப் பயிற்சியுடன் பாடவகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இணைவுக்கல்வித் திட்டத்தின் சிறப்பம்சங்கள்

- புதுமையான, வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய பாடங்களை அறிமுகப்படுத்தி வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் அளிப்பது.
- நேர்முகப் பயிற்சி வழங்குவதற்கான முக்கியத்துவம் அளித்து அவர்களின் பயிற்சி முறையினைப் பாடத்திட்டங்களில் உள்ளடக்கி இருப்பது.
- தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் நிபுணர்களைப் பாடத்திட்டக் குழுவில் அங்கத்தினர்களாகக் கொண்டு தொழில் நிறுவனத் தேவைக்கேற்பப் பாடத்திட்டங்கள் வழங்குதல்
- தனிவாரியம் உள்ள உள்கட்டமைப்பு மற்றும் கல்வி புகட்டும் திறன்களைப் பயன்படுத்தி மாணவர்களுக்குத் தரமான கல்வியும் வேலைவாய்ப்பும் வழங்குதல்.
- பல்கலைக்கழகத்தின் துறைகள் கல்லூரிகள் மற்றும் தொலைநிலைக்கல்வி வாயிலாக வழங்க இயலாத பாடத்திட்டங்களை இணைவுக் கல்வித்திட்டத்தின் கீழ் வழங்குதல்
- இணைவுப் பாடத்திட்ட முறையின் மூலம் பல்கலைக்கழகத்தில் நிதி ஆதாரத்தினைச் சீரிய முறையில் பெருக்குதல்.
- கடந்த மூன்று ஆண்டுகளில் துணைவேந்தர் அவர்களின் சீரிய முயற்சியால் இணைவுக் கல்வித்திட்டத்தில் முக்கியமான தொழில் மற்றும் மருத்துவ நிறுவனங்கள் இணைவு பெற்றிருப்பது மிக முக்கியமானதாகும்.

தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் மாணவர், அலுவலர் நலப்பிரிவு

ஒருங்கிணைப்பாளர் : முனைவர் மு.பாண்டி

பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள், பணிபுரியும் ஆசிரியர்கள், அலுவலர்கள் நலனைக் கருத்தில் கொண்டு தற்போதைய துணைவேந்தர் பேரா.முனைவர் பெ. கன்னியப்பன் அவர்களின் முயற்சியில் உருவாக்கப்பெற்ற பிரிவு அழகப்பா பல்கலைக்கழக மாணவர்களுக்குக் கிடைக்கவேண்டிய உதவித் தொகைகளை உடன் பெற்றுத் தருவது தனிச்சிறப்பாகும். அமரர் ராஜீவ்காந்தி அவர்களின் பெயரில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஆய்வுத்திட்டத்தில் இரு முனைவர் பட்டத்தினருக்கும், 22 இளம் முனைவர் பட்டத்திற்குமெனத் தமிழகப் பல்கலைக்கழகங்களிலேயே ஆய்வு உதவித் தொகை அதிகளவில் இவ்வாண்டு அழகப்பா பல்கலைக்கழகம் பெற்றிருப்பது குறிப்பிடத்தகுந்தது.

பிற அமைப்புகள்

நாட்டு நலப்பணித்திட்டம்

செஞ்சுருள் கழகம்

மக்கள் தொகைக் கல்வி

ஆலயங்கள்

அருள்மிகு விநாயகர் ஆலயம்

அருள்மிகு முருகன் ஆலயம்

வள்ளல் அழகப்பர் நினைவு ஆலயம்

குடியிருப்பு வளாகம்

பேராசிரியர், அலுவலர்கள் குடியிருப்புகள்

விடுதிகள்

ஆண்கள் விடுதி	-	Men's Hostel
மகளிர் விடுதி	-	Women's Hostel
வெளிநாட்டு மாணவர் விடுதி	-	Foreign Students Hostel

விருந்தினர் இல்லம் - **Guest House**

பிற வசதிகள்

மருத்துவமனை	-	Medical Centre
உணவு விடுதி	-	Canteen
பல்பொருள் அங்காடி	-	Stationery Store
சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்த்திட்டம்	-	Mineral Water Plant

நிலையான தொண்டுகள் நித்தம்
உலையாமல் ஆற்றிய வள்ளல்
அழகப்பர் சீர்பரப்பும் இன்றைய
துணைவேந்தர், பதிவாளர்

முனைவர் பெ. கன்னியப்பன்
துணைவேந்தர்

அழகப்பா பல்கலைக்கழகத்தை உலகளாவிய தரத்திற்கு வளர்ச்சிப் பாதையில் உயர்த்திக்கொண்டு வரும் துணைவேந்தர் முனைவர் பேராசிரியர் பெ. கன்னியப்பன் அவர்கள் இப்பல்கலைக்கழகப் பொறுப்பேற்கும் முன்பு மத்திய அரசின் பல்கலைக்கழகத் தகுதி பெற்ற காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு கல்வி மற்றும் நிர்வாகப் பொறுப்புகளை வகித்தவர். அங்கு ஊரக ஆற்றல் மையத்தினை உருவாக்கிய பெருமையுடையவர். அம்மையத்தின் நிறுவனர் மற்றும் இயக்குநராக 1998-முதல் 2001 வரை பொறுப்பேற்றிருந்தவர். அவ்வமயம் பல்வேறு ஆய்வுத்திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றியவர், ஆய்வு மற்றும் விரிவாக்கத் திட்டங்களின் முதன்மையராகப் பணியாற்றியதோடல்லாமல் UGC, MNES, TEDA, MBHM, DAE ஆகிய நிறுவனங்களின் நிதியுதவியுடன் 17 ஆய்வு மற்றும் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றிய பெருமைக்குரியவர். 1998 முதல் 2001 வரை காந்தி கிராமியப் பல்கலைக்கழகத்தின் தேர்வாணையராகவும், 2000 முதல் 2004 வரை பதிவாளராகவும் பணியாற்றிய தலைமைப்பண்புக்குரியவர்.

பல்வேறு விருதுகளையும் பட்டங்களையும் மதிப்பினையும் பெற்ற துணைவேந்தர் ‘கன்னியப்பன் லெமா’ என்னும் உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட கணிதவியல் கண்டுபிடிப்பிற்காகத் தலைசிறந்த இளைஞர் விருதினைப் பெற்றவர். சிங்கப்பூரில் நடைபெற்ற APORS 2000 என்ற பன்னாட்டு மாநாட்டில் தலைமைப் பொறுப்பினை வகித்தவர். பல்கலைக்கழக மானியக்குழுவின் உயர்பதவிகளில் பொறுப்பு வகித்தவர். சீன மற்றும் பெய்சிங்கில் ஆகஸ்ட் 1999-ஆம் ஆண்டு நடைபெற்ற உலகளாவிய ஆராய்ச்சித் திட்ட அமைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராய்ச்சித் திட்டவளர்ச்சி விருதைப் பெற்றவர். கல்வி வளர்ச்சித் திட்டங்களுக்காக அமெரிக்கா, பிரான்ஸ், சிங்கப்பூர், மலேசியா, சீனா, தாய்லாந்து, கிங்ஸ்டன், ஜமைக்கா, துபாய், பக்ரெய்ன், கத்தார், லண்டன் ஆகிய நாடுகளுக்குச் சென்று ஆய்வுப்பணியை வளர்த்துக் கல்வி உறவை ஏற்படுத்தித்தந்தவர்.

2004 ஜுன் 9-ஆம் நாள் அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பதவியேற்றார். கல்விக் கொடையளித்த கற்பகத்தருவாம் வள்ளல் அழகப்பரின் கனவை நனவாக்குவதைத் தனது குறிக்கோளாகக் கொண்டு அதனை நிறைவேற்றியும் காட்டியவர். தேசியத் தர மதிப்பீட்டுக்குழுவின் ‘ஏ’ மதிப்பைப் பல்கலைக்கழகம் பெற்றது இவர் தம் அரிய முயற்சியால் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் ஊரகவளர்ச்சி மையம், இராமானுசர் உயர்கணித மையம், நானோ அறிவியல் மையம், காந்திய மையம், நேரு மையம், மற்றும் எஸ்எஸ்டி நலப்பிரிவு ஆகியவை உருவாகக் காரணமாக இருந்ததுடன் தொழில் நுட்பவியலையும் மேனாட்டுத் தரத்திற்கு இணையாக உருவாக்கி, பல்கலைக்கழகத்தைப் பெருமையுறச் செய்தவர் அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் கல்வி உறவுகொண்டு பின்தங்கிய சிற்றூர்கள் சூழ்ந்த காரைக்குடியில் அமைந்துள்ள அழகப்பா பல்கலைக்கழகத்தை உலகளாவிய நிலையில் விரிவாக்கம் செய்து பெயர் பெற்றுத் தந்த சிறந்த துணைவேந்தர் என்பதனைப் பல்கலைக்கழக வரலாறு உணர்த்தும்.

முனைவர் இரெ. தண்டபாணி
பதிவாளர்

பல்கலைக்கழக வளர்ச்சிக்கு உறுதுணையாய்த் தன்பணிகளைச் செம்மையாய்ச், சிறப்பாய் ஆற்றிவரும் பதிவாளர் முனைவர் இரெ. தண்டபாணி அவர்கள் அழகப்பா பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். தேர்வுத்துறை சீர்திருத்தம் மற்றும் மதிப்பீடு செய்தலில் சான்றிதழ்கள் பெற்றவர். 1982 முதல் 1985 வரை காந்திகிராமியப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தரின் செயலராகப் பணியாற்றிய அவர் 1985 முதல் 1986 வரை துணைப்பதிவாளராகவும் பணிபுரிந்தவர். 1986-1988ல் மத்திய அரசின் மனிதவளமேம்பாட்டு அமைச்சகத் திட்டத்தில் ஆலோசகராகப் பணிபுரிந்த சிறப்புக்குரியவர். 1988-1990இல் அழகப்பா பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளராகப் பதவிவகித்தவர். 1990-2001இல் துணைப்பதிவாளராகத் திகழ்ந்தவர். ஜூன் 2001 முதல் பதிவாளராகப் பதவியேற்று அழகப்பா பல்கலைக்கழகத்தைச் செம்மையாக வழிநடத்தி வருகிறார்.

தற்பொழுது அழகப்பா பல்கலைக்கழகத்தின் பேரவை மற்றும் ஆட்சிக்குழு ஆகியவற்றின் செயலராகவும், அழகப்பா பல்கலைக்கழகத்தின் நேரடிப் பார்வையில் இயங்கும் மாதிரி மேல்நிலைப்பள்ளியின் செயலராகவும் உள்ளார். பெங்களூரிலுள்ள NCTE வருகைக்குழு உறுப்பினர், தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகக் குழுவின் அமைப்பாளராகவும் விளங்குவது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆய்வுக்கட்டுரைகளையும், நூல்களையும் வெளியிட்ட ஆய்வாளரும் படைப்பாளருமாவர். ஹைதராபாத்திலுள்ள தெற்குப் பிராந்திய கவுன்சிலிங் பல்கலைக்கழக மானியக்குழு உறுப்பினராகவும், அழகப்பா பல்கலைக்கழகத்தின் வயதுவந்தோர் மற்றும் தொடர்கல்வித்துறை காந்தியப் படிப்பு மையம், மகளிரியல் மையம், சிவகங்கை மாவட்ட ஆற்றல் புனர்நிர்மானத்திட்டம் ஆகியவற்றின் ஆலோசனைக்குழு உறுப்பினராகவும் பல்வேறு பொறுப்புகளைப்பெற்று செம்மையுடன் பல்கலைக்கழகத்தை உயர்த்த உதவிடும் பெருமைக்குரியவர்.

அன்னைத் தெரசா விருது, பாரத்ஜோதி விருது, வாழ்நாள் கல்விசார் விருது போன்ற மதிப்பிற்குரிய பல்வேறு விருதுகளைப் பெற்றவர். ஸ்ரீலங்கா, மஸ்கட், துபாய், பக்ரெய்ன், தோகா, ஜமைக்கா, போன்ற பல நாடுகளுக்கும் பயணம் செய்து கல்வி வளர்ச்சிக்கும் பல்கலைக்கழக வளர்ச்சிக்கும் உறுதுணையாய் நின்ற பெருமைக்குரிய தகைமையுடையவர்.

வள்ளல் அழகப்பரின் கனவை நனவாக்கும் சிற்பிகள்

பல்கலைக்கழக நிருவாகம்

வேந்தர்	-	மேதகு திரு. சுர்ஜித்சிங்பர்னாலா, ஆளுநர்
இணைவேந்தர்	-	மாண்புமிகு க. பொன்முடி, உயர்கல்வித்துறைஅமைச்சர்
துணைவேந்தர்	-	பேரா. முனைவர் பெ. கன்னியப்பன்
பதிவாளர்	-	முனைவர் ஆர். தண்டபாணி
தேர்வாணையர்	-	பேரா. முனைவர் வெ. மாணிக்கவாசகம்
நிதி அலுவலர்	-	திரு. ஆர். பூமிநாதன்
துணைப்பதிவாளர்	-	முனைவர் பி.செங்கல்வராயன்
சிறப்பு அலுவலர்கள்	-	பொறியாளர் முனைவர் அ. இராமகிருஷ்ணன்
		பேரா. முனைவர் டி. வாசுதேவன்
		பேரா. முனைவர் எஸ். கலியமூர்த்தி
நூலகப்பொறுப்பு	-	பேரா. முனைவர் எஸ். அண்ணாமலை

ஆட்சிக்குழு உறுப்பினர்கள்

முனைவர் பெ. கன்னியப்பன்

முனைவர் (திருமதி) உமையாள் இராமநாதன்

திரு. கே. கணேசன், ஐ.ஏ.எஸ்.

திரு. வி.கே. சுப்புராஜ், ஐ.ஏ.எஸ்.

முனைவர் மணி

திரு. ஆர். சிவக்குமார், ஐ.ஏ.எஸ்.

டாக்டர். பி. விஜயலெட்சுமி

திரு.ஏ. திருநாவுக்கரசு

முனைவர் டி. வாசுதேவன்

டாக்டர். ஜி. காத்தமுத்து

டாக்டர். எஸ்.கே. கோபால்

புல முதன்மையர்கள்

பேரா. முனைவர் எஸ். கோகிலவாணி	-	கலைப்புலம்
பேரா. முனைவர் டி. வாசுதேவன்	-	அறிவியற் புலம்
பேரா. முனைவர் ஆர்.எம்.சிதம்பரம்	-	மேலாண்மையியற் புலம்
பேரா. முனைவர் ஏ.எம். மூர்த்தி	-	கல்வியியற் புலம்
பேரா. முனைவர் எஸ். கலியமூர்த்தி(பொ)	-	கல்லூரி வளர்ச்சிக்குழுமம்
பேரா. முனைவர் டி. வாசுதேவன்	-	மாணவர்கள் நலன் & சிறப்பு அலுவலர் (திட்டம்)

தொலைநிலைக்கல்வி

இயக்குநர்

முனைவர். சேது. சுடலைமுத்து

உதவி இயக்குநர்

திரு. பாரிராமன் பாரி

கல்லூரி வளர்ச்சிக்குழுமம் (CDC)

முதன்மையர்

முனைவர் எஸ். கலியமூர்த்தி (பொ)

உதவி இயக்குநர்

திரு. என். இராஜ்குமார்

உதவி மக்கள் தொடர்பு அதிகாரி

திரு. எஸ். எஸ். சேகரன்

உதவிப்பதிவாளர்கள்

திரு. வி. முத்தையா

திரு. எச். தாமஸ்

திரு. எம். பிச்சப்பன்

திரு. கே. காளைராஜன்

திருமதி. எம். பத்மினி

திருமதி. ஜெயபாரதி

திருமதி. ஆர். சுந்தரவள்ளி

திரு. ஜி. பழனியப்பன்

திரு. எம். பாலசுப்பிரமணியன்

திரு. எம். இராமமூர்த்தி

திரு. எஸ். உருமன்

திரு. எஸ். பாண்டியராசு

திரு. எம். பாக்கியம்

திரு. பி. சுப்பு

திரு. கே. மாரியப்பன்

திரு. கே.ஜி.கிருஷ்ணமூர்த்தி

முன்னாள் துணைவேந்தர்கள்

1.	முனைவர் (திருமதி) இராதா தியாகராஜன்	04.07.1985	-	30.04.1991
2.	பேரா. முனைவர் கே. நாகப்பன்	06.05.1991	-	05.05.1994
3.	பேரா. முனைவர் பெ. இராமசாமி	21.07.1994	-	20.07.1997
4.	பேரா. முனைவர் க. ருக்மணி	14.09.1997	-	13.09.2000
5.	பேரா. முனைவர் அ. இராமசாமி	10.11.2000	-	09.11.2003

முன்னாள் பதிவாளர்கள்

1.	பேரா. ஜி. சங்கரராஜுலு	11.07.1985	-	31.08.1986
2.	திரு. என். திருநாவுக்கரசு	31.08.1986	-	31.05.1988
3.	முனைவர் எம்.ஏ.அருளானந்தம்	01.06.1988	-	30.06.1990

4.	திரு. என். திருநாவுக்கரசு	01.07.1990	-	26.09.1990
5.	திரு. கே.ஜெயராமன்	26.09.1990	-	17.09.1992
6.	முனைவர். எஸ். நிலவழகன்	17.09.1992	-	16.10.1992
7.	முனைவர் வி.பி.எஸ். ராஜன்	16.10.1992	-	03.11.1993
8.	முனைவர் எஸ். நிலவழகன்	03.11.1993	-	02.05.1994
9.	முனைவர் எஸ். சக்திவேல்	02.05.1994	-	06.05.1996
10.	முனைவர் ஆர். தனசேகரன்	06.05.1996	-	03.02.1998
11.	முனைவர் எம்.ஏ. அருளானந்தம்	04.02.1998	-	13.02.1998
12.	பேரா. எம். அனந்தநாராயணன்	14.01.1999	-	05.12.2000
13.	பேரா. எம். கருணாநிதி	06.12.2000	-	31.05.2001
14.	முனைவர் ஆர். தண்டபாணி	01.06.2001	-	08.05.2003

முன்னாள் தேர்வாணையர்கள்

பேரா. எஸ். திருநாவுக்கரசு

பேரா. எஸ். சரத்சந்திரன்

பேரா. கே. ஜெயராமன்

பேரா. என். நிலவழகன்

பேரா. முனைவர் கே. சந்திரசேகரராவ்

பேரா. முனைவர் என். ஸ்ரீதரன்

பேரா. முனைவர் ஆர்.எம். சிதம்பரம்

பேரா. முனைவர் எஸ். சக்திவேல்

பேரா. எம். கருணாநிதி

முனைவர். கே. பவுன்ராதா

பேரா. முனைவர் பி. சிவகேசன்

முன்னாள் நிதி அலுவலர்கள்

திரு. பி. நரசிங்கம்

திரு. புகழீஸ்வரன்

திரு. தியாகராஜன்

திரு. கிருஷ்ணன்

திரு. பி. இராசாராம்

திரு. டி. ரெங்கநாதன்

திரு. பி. சந்தானராகவன்

திரு. சங்கரலிங்கம்

திரு. எஸ். சுப்புரத்தினம்

திரு. கே. காளீஸ்வர சுப்பிரமணியன்

கல்லூரி வளர்ச்சிக்குழும முன்னாள் முதன்மையர்

முனைவர் எஸ். மோகன்

முன்னாள் நூலகர்கள்

பேரா. எஸ். ஜெயராமன்

முனைவர் பேரா. எஸ். மோகன் (பொ)

முனைவர் பேரா. வெ. மாணிக்கவாசகம் (பொ)

துறைகள்

கலைப்புலம்

1. தமிழ்த்துறை
2. மகளிரியல் துறை
3. ஆங்கிலம் மற்றும் அயல்நாட்டு மொழிகள் துறை

அறிவியற் புலம்

1. கணிதவியல் துறை
2. இயற்பியல் துறை
3. தொழிலக வேதியியல் துறை
4. கணினி அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை
5. உயிரித் தொழில்நுட்பவியல் துறை
6. கடலியல் மற்றும் கடலோரவியல் துறை

மேலாண்மைப்புலம்

1. பன்னாட்டு வர்த்தம் மற்றும் வணிகவியல் துறை
2. வங்கி மேலாண்மையியல் துறை
3. நிருமச் செயலரியல் துறை
4. அழகப்பா மேலாண்மையியல் நிறுவனம்

கல்வியியற் புலம்

1. கல்வியியல் துறை
2. உடற்கல்வியியல் துறை

மையங்கள்

1. கணினி மையம்
2. மகளிரியல் மையம்
3. வயது வந்தோர் தொடர்கல்வி மற்றும் விரிவாக்க மையம்
4. ஊரக வளர்ச்சி மையம், பின்னலாடைப் பயிற்சி மையம்
5. காந்திய மையம்
6. நேரு மையம்
7. உடலியல் கல்வி மையம்

தொலைநிலைக்கல்வி

இளநிலைப் பட்டப் படிப்புகள்	(3 ஆண்டுகள்)	- 14
முதுநிலைப் பட்டப் படிப்புகள்	(2 ஆண்டுகள்)	- 24
முதுநிலைப் பட்டயப்படிப்புகள்	(1 ஆண்டு)	- 6
சான்றிதழ்ப் படிப்புகள்	(1 ஆண்டு)	- 2
ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்புகள்	(1 ஆண்டு)	- 11

உறுப்புக் கல்லூரிகள்

1. அழகப்பா பல்பலைக்கழகக் கல்வியியல் கல்லூரி
2. அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரி

இணைப்புக் கல்லூரிகள்

1. அழகப்பா அரசு கலைக் கல்லூரி - காரைக்குடி.
2. ராஜா துரைசிங்கம் நினைவு அரசு கலைக்கல்லூரி - சிவகங்கை.
3. மகளிர் அரசு கலைக்கல்லூரி - சிவகங்கை.
4. வி.எஸ்.எஸ்.அரசு கலைக்கல்லூரி, பூலாங்குறிச்சி.
5. அரசு கலைக்கல்லூரி - பரமக்குடி.
6. சேதுபதி அரசு கலைக்கல்லூரி - இராமநாதபுரம்.

7. அரசு மகளிர் கலைக்கல்லூரி - இராமநாதபுரம்.
8. ஆறுமுகம்பிள்ளை சீதையம்மாள் கல்லூரி - திருப்பத்தூர்,
9. டாக்டர். சாகிர்உசேன் கல்லூரி - இளையான்குடி.
10. சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி - பள்ளத்தூர்.
11. ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி - தேவகோட்டை.
12. இராமசாமி தமிழ்க்கல்லூரி - காரைக்குடி.
13. பசும்பொன் திரு. முத்துராமலிங்கத்தேவர் நினைவுக்கல்லூரி -கமுதி.
14. கணபதி சீதையம்மாள் கல்லூரி - மானாமதுரை.
15. மாதா கலை & அறிவியல் கல்லூரி - மானாமதுரை.
16. ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் கல்லூரி - அமராவதிபுதூர்.
17. மதுரை சிவகாசி நாடார் பயோனியர் மீனாட்சி மகளிர் கல்லூரி - பூவந்தி.
18. இதயா மகளிர் கல்லூரி - சருகனி.
19. சோணைமீனாள் கலை & அறிவியல் கல்லூரி - முதுகுளத்தூர்.
20. சையது ஹமீதா கலை & அறிவியல் கல்லூரி - கீழக்கரை.
21. தாசிம்பீவி அப்துல்காதர் மகளிர் கல்லூரி - கீழக்கரை,
22. ஆனந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி - தேவகோட்டை.
23. கவுசானல் கலை அறிவியல் கல்லூரி - முத்துப்பேட்டை.
24. டாக்டர். உமையாள் இராமநாதன் மகளிர் கல்லூரி - காரைக்குடி.

கல்வியியல் கல்லூரிகள்

25. ஆறுமுகம்பிள்ளை சீதையம்மாள் கல்வியியல் கல்லூரி - திருப்பத்தூர்.
26. மாதா கல்வியியல் கல்லூரி - வான்புரம், மானாமதுரை.
27, கணபதி கல்வியியல் கல்லூரி - பரமக்குடி.

மாலைக் கல்லூரிகள்

மாலைநேரக் கல்லூரிகள் - மூன்று

நிறுவனங்கள்

அனுமதிபெற்ற நிறுவனங்கள் - மூன்று

பல்கலைக்கழக வளர்ச்சியில் துறைகள், மையங்களின் பங்களிப்பு

மகளிரியல் துறை (Women's Studies)

துறைத்தலைவர் பேரா. முனைவர் எஸ். கோகிலவாணி

பல்கலைக்கழகத்தில் மகளிர் முன்னேற்றத்தை மையமிட்டு இந்தியாவிலேயே முதன்முதலாக உருவாக்கப்பட்ட துறை. 1989இல் தொடங்கப்பட்டது. ஏறக்குறைய 66 முதுநிலை மாணவிகளையும், 18 ஆய்வியல் நிறைஞர்களையும், 10 முனைவர் பட்ட ஆய்வாளர்களையும் உருவாக்கியப் பெருமை இத்துறைக்கு உண்டு. பாரதப்பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ்த் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி முகாமில் பயனடைந்தோர் பற்றிய ஆய்வுத்திட்டம் முதலாக ஏறக்குறைய 20 ஆய்வுத்திட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. தற்பொழுது 5 ஆய்வுத் திட்டங்களைச் சிறப்புற நடத்திவருகின்றது. சமூகநல நோக்கத்துடன் சிறப்பாகத் தன்பணி ஆற்றிவரும் இத்துறை பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் தன்பங்கை ஆற்றிவருகிறது.

ஆங்கிலம் மற்றும் அயல்நாட்டு மொழிகள் துறை

(English & Foreign Languages)

துறைத்தலைவர் : பேரா. முனைவர் எம். சோலையன்

ஆங்கிலம் மற்றும் அயல்நாட்டு மொழிகள் துறை ஜூன் 2006-இல் துவக்கப்பெற்றது. பி.ஏ., எம்.ஏ., எம்.பில்., முழுநேரப் படிப்பாகவும் ஃபிரெஞ்சு மற்றும் ஜெர்மன் மொழிகள் பகுதி நேரச் சான்றிதழ்ப் படிப்பாகவும் நடத்தப்பெறுகின்றன. முனைவர் பட்ட ஆய்வுகளும் நிகழ்கின்றன.

மத்திய அரசின் மனித வளத்துறையிடமிருந்து தமிழ் செம்மொழித் திட்டத்தின் கீழ் எம்.அனிசா பர்வீன் என்னும் முனைவர் பட்ட ஆய்வு மாணவி மாதந்தோறும் ரூபாய் பத்தாயிரம் உதவித் தொகை பெறுகின்றார். இவ்வுதவி ஐந்தாண்டுகட்கு உரியது. புதுதில்லி ஜவர்ஹர்லால் நேரு நினைவு நிதியிலிருந்து ஆ.பெனிட்டா என்னும் முனைவர் பட்ட ஆய்வு மாணவி மாதம் தோறும் ரூபாய் ஆறாயிரம் உதவித்தொகையாகப் பெற்றுள்ளார். இவ்வுதவி இரண்டாண்டுகட்கு வழங்கப்பெறும். ராஜீவ்காந்தி ஆய்வு உதவித் திட்டத்தின்கீழ், எட்டு மாணவர்கள் எம். ஃபில் ஆய்விற்காக மாதம் ரூபாய் எட்டாயிரம் என்ற அளவில் ஓராண்டுக்குப் பெற்றுள்ளனர். மேலும் சீன மாணவர்கள் ஆறுபேர் இத்துறையில் இளங்கலைப் பட்டம் பெற்றுள்ளனர். துணைவேந்தரின் சீரிய முயற்சியால் இத்துறையில் ஏற்பட்ட இந்தியச் சீனக் கல்வித் தொடர்பு பல்கலைக்கழக வரலாற்றில் அரியதும் குறிப்பிடத்தக்கதும் ஆகும்.

கணிதவியல் துறை (Mathemetics)

துறைத்தலைவர் : பேரா. டாக்டர் என்.ஸ்ரீதரன்

பல்கலைக்கழகம் தொடங்கப்பெற்ற காலத்திலிருந்து இயங்கிவரும் கணிதவியல் துறை முதுகலை, ஆய்வியல் நிறைஞர் பட்டக் கல்வியினை அளித்து வருவதுடன் பல்வேறு பிரிவுகளில் ஆராய்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளித்துச்சிறந்து விளங்குகிறது. இத்துறையின் முதல் பேராசிரியராகப் பணிபுரிந்த முனைவர் கே. சந்திரசேகரராவ் அவர்களின் காலந்தொட்டே இத்துறை ஒரு சிறந்த ஆராய்ச்சி மையமாகச் செயல்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் பட்ட மேற்படிப்புக்கணிதவியல் பயிலும் மாணவர்களுக்கான மாநில அளவில் வினாடிவினா நிகழ்ச்சி இத்துறையின் சார்பாக நடத்தப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் இரண்டு அல்லது மூன்று கருத்தரங்குகள் தேசிய அளவில் நடத்தப்படுகின்றன. சிறந்த ஆராய்ச்சித் திறன் கொண்ட கணிதவியல் பேராசிரியர்கள் பலர் இத்துறையில் நடத்தப்படும் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர். 2006-ஆம் ஆண்டு கணிதத்தில் உயர்கல்விக்காக 'இராமானுசம் கணிதவியல் மையம்' ஒன்று மதிப்பிற்குரிய துணைவேந்தர் பெ. கன்னியப்பன் அவர்களின் முயற்சியால் நிறுவப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இயற்பியல்துறை (Physics)

துறைத்தலைவர் : பேரா. டாக்டர் சி.சஞ்சீவிராஜா

1985-இல் தொடங்கப்பட்டது. முனைவர் பட்டம் வரையிலான முதுநிலை ஆய்வுக்கல்வியை அளித்து வரும் இவ் அறிவியல் துறை இதுகாறும் 375 முதுநிலை மாணாக்கர்களையும், 253 ஆய்வியல் நிறைஞர்களையும், 45 முனைவர் பட்ட ஆய்வாளர்களையும் உருவாக்கிய பெருமையுடையது. உலகத்தரத்திற்கு இணையாகச் சிறந்த ஆய்வுகளையும், கருத்தரங்குகளையும், மாநாடுகளையும், பணிப்பட்டறைகளையும் தேசியஅளவில் சிறப்பாக நடத்தி வரும் பெருமையும் இத்துறையைச் சாரும். தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் பல்வேறு விருதுகளையும் அங்கீகாரத்தையும் பெற்று ஜப்பான், கொரியா, தைவான், சைனா போன்ற வெளிநாடுகளில் சென்று ஆய்வுப்பணி மேற்கொண்ட திறன்மிகுந்த கல்வி நிறை பேராசிரியர்களைப் பெற்ற இத்துறை பல்கலைக்கழக மேம்பாட்டிற்கு ஆற்றிவரும் பணி பாராட்டிற்குரியதாகும்.

தொழிலக வேதியியல் (Industrial Chemistry)

துறைத்தலைவர் : பேரா.முனைவர் டி. வாசுதேவன்

தொழிலக வேதியியல் துறை 1985-இல் பல்கலைக்கழகத்தில் துவங்கப்பட்டது. இத்துறையில் முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வுகள் நிகழ்கின்றன. தொழிலக வேதியியல், மின்வேதியியல் என்ற இருபிரிவுகளைக் கொண்ட இவ்வேதியியல் துறை தகுதிவாய்ந்த துறை வல்லுநர்களையும், 135 முதுகலை மாணாக்கர்களையும் (முழுநேர, பகுதிநேர) 13 ஆய்வியல் நிறைஞர்களையும், 45 முனைவர் பட்ட ஆய்வாளர்களையும் உருவாக்கிய துறையாக விளங்குகிறது. தொழிலக வேதியியலில் 'நானோ அறிவியல்' என்ற ஆய்வு நிலையில் பரந்துபட்டு வளர்ந்துவருகிறது. துறையில் நிகழும் ஆய்வுத் திட்டங்களுக்காக நான்கு கோடி நிதியுதவி பெற்று வளர்ச்சிப் பாதையில் பல்கலைக்கழகத்தை உயர்த்திக்கொண்டிருக்கும் இத்துறை ஏறக்குறைய 600க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளைத் தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் வெளியிட்டிருப்பது மேலும் பெருமை சேர்ப்பதாக அமைகிறது.

கணினி அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை (Computer Science and Technology)

துறைத்தலைவர் : பேரா.முனைவர் இ.ஆர். நாகநாதன்

1986 - ஜனவரி இல் துவங்கப்பெற்ற இக்கணினி அறிவியல் துறை பல்கலைக்கழக வளர்ச்சியில் பெரும்பங்கினையுடையது. கிராமங்கள் சூழ்ந்த காரைக்குடிப் பகுதி மற்றும் பிறபகுதி மாணாக்கர்கள் கணினி அறிவு பெற்றுப் பயன்பெறத்தக்க வகையிலும் நல்ல நல்ல வாய்ப்புகளைப் பெற்றுத் தரும் வகையிலும், நவீன யுகத்திற்கு ஏற்றவாறு கணிப்பொறி பற்றிய அறிவினை உலகத்தரத்திற்கேற்ப அளித்து, வளர்த்து வரும் பல்கலைக்கழகத் துறைகளில் இத்துறையும் ஒன்று. ஆண்டுதோறும் முழுநேர மற்றும் தொலைநிலைக் கல்வி நிலையில் கணினிக் கல்வி பயிலும் மாணாக்கர்கள் உலகத் தரம் வாய்ந்த கல்வியை இத்துறையின்வழிப் பெற்றுப் பயனடைந்துள்ளனர். அதிகளவில் வெளிநாடுகளில் இத்துறை மாணவர்கள் கணினித் துறையில் பணிபுரிந்து வருவது குறிப்பிடத்தக்கது. இத்துறையில் முனைவர் பட்டம் பெற்றவர்கள் 6 பேர், ஒருவர் ஆய்வேடு அளித்துள்ளார், 21பேர் ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

தற்பொழுது பேரா. முனைவர் நாகநாதன் அவர்களால் நூறு இலட்சம் NTRO நிதியுதவியில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுத்திட்டம் குறிப்பிடத்தகுந்தது. இத்துறையில் உள்ள தகுதிபடைத்த பேராசிரியர்களால் ஏறக்குறைய 98 ஆய்வுக்கட்டுரைகள் வெளிவந்துள்ளன. ஊரக இருத்தல் திட்டம் எனும் முதுநிலை இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான பாடத்திட்டப் பயிற்சியின் வழியாக அறியப்பட்ட கிராமமக்களுக்கும் பல்கலைக்கழக அலுவலகப் பணியாளர்களுக்கும் கணினிக் கல்வி பயிற்றுவித்தல் போன்ற பல்வேறு நன்முயற்சிகளும் சமூகமேம்பாட்டு நோக்கில் மேற்கொண்டுவரும் சிறந்த துறையாகும்.

உயிரித் தொழில்நுட்பவியல் துறை (Bio Technology)

துறைத்தலைவர் : பேரா. முனைவர் கருத்தபாண்டியன்

உலகளாவிய தரத்திற்கு மாணாக்கர்களை உயர்த்திக் கொண்டிருக்கும் பல்கலைக்கழகத்தின் இத்துறை 2002 மார்ச் 11-ல் தொடங்கப்பெற்றது. முதுநிலை, முனைவர்பட்டம், முதுமுனைவர் பட்டக்கல்வியை அளித்து வரும் இத்துறை UGC, CSIR, SSCP, DST போன்ற மத்திய, மாநில நிறுவனங்களின் நிதியுதவி பெற்றுப் பல்வேறு ஆய்வுத்திட்டங்களை நிறைவு செய்தும், நிகழ்த்தியும் வருகின்றது. மாணவர்கள் பரந்த அறிவுபெறும் வகையில் இணையற்ற மதிப்புப் பெறும் நூல்களையும், இதழ்களையும், நவீன உள்கட்டமைப்பு வசதிகளையும் கொண்டமைந்த நூலகம் இத்துறையின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். மேலும் தேசிய அளவில் கருத்தரங்குகளையும் பணிப்பட்டறைகளையும் ஆண்டுதோறும் நடத்தி, பல்கலைக்கழக வளர்ச்சியில் பெரும்பங்காற்றி வருகிறது.

கடலியல் மற்றும் கடலோரவியல் துறை (Oceanography and Costal Area Studies)

துறைத்தலைவர் : பேரா. முனைவர் (திருமதி) ஸ்டெல்லா (பொ)

கடல்வளம் சூழ்ந்த இம்மாநிலத்தில் துறைமுகவளர்ச்சியோடு சர்வதேசக் கடல்நீர்த் திட்டங்கள் செயல்படுத்துவதற்குக் கடலியல் கல்வி மிகவும் இன்றியமையாத ஒன்றாகத் திகழ்ந்து வருகின்றது. அழகப்பா பல்கலைக்கழகம் மட்டுமே முழுநேரக் கடலியல் கல்வியை வழங்குவதில் தனிச்சிறப்புப் பெற்றுள்ளது. பல்துறைச் சார்ந்த மாணவர்களைச் சேர்க்கைக்கு அனுமதித்துப் பல்வேறு துறைசார்ந்த அறிவியல் மற்றும் பொறியியல் பிரிவுகளில் கற்றுக்கொடுப்பதன் மூலம் கடலியல் கல்வியை வழங்குவதில் தனித்து நிற்கிறது. கடலியல் பல்துறை சார்ந்த பயன்பாட்டியல் கல்வி அளிப்பதால் பல்வேறுபட்ட தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் வேலைவாய்ப்பை வழங்க முன்வருவது குறிப்பிடத்தக்கது. இத்துறையில் இக்கல்வியில் தேர்ந்த மாணவர்கள் மத்திய மாநில அரசுகளின் நிறுவனங்களில் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்துறை தொண்டியிலிருப்பதால் சேதுசமுத்திரக் கால்வாய் பற்றிய தரவுகளை மேம்படுத்த ஒரு மையமாகச் செயல்படும் நோக்குடன் அழகப்பா பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது. வருங்காலத்தில் கடல் பாதுகாப்புத் துறையுடன் தேவையான கூட்டுமுயற்சிகளை ஏற்படுத்துவதன் மூலம் கடல்பாதுகாப்பு நடவடிக்கைகளைச் சிறந்த வகையில் மேம்படுத்த இத்துறை பாடுபட்டு வருகிறது.

பன்னாட்டு வர்த்தக மேலாண்மை மற்றும் வணிகவியல் துறை
(Commerce and International Business Management)

துறைத்தலைவர் : பேரா. முனைவர் எம். செல்வம்

பல்கலைக்கழகம் தொடங்கப்பெற்றது முதல் வணிகத்துறை சிறப்பாக இயங்கிவருகிறது. 1995-96 முதல் பன்னாட்டுத் வர்த்தகம் மற்றும் வணிகவியலில் பட்ட மேற்படிப்பினை வழங்கி வருகிறது.

ஆய்வியல்நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வுகள் இத்துறையில் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துறையில் பயிலும், ஆய்வு நிகழ்த்தும் மாணவர்கள் முற்றிலுமாக வேலைவாய்ப்புப் பெறுவது ஒரு சிறப்பாகும். இப்படிப்பைப் பிற பல்கலைக்கழகங்களும் மற்றும் தன்னாட்சிக் கல்லூரிகளும் தற்சமயம் தொடங்கியுள்ளன. இத்துறைப் பேராசிரியர் முனைவர் எம்.செல்வம் ஓமன் நாட்டில் (2004 - 2006இல்) மஸ்கட் பிரைவேட் பல்கலைக்கழகத்தில் (MCBS) பேராசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.

டாக்டர் பி. நடராஜன் மற்றும் டாக்டர் டி.ஆர்.குருமூர்த்தி ஆகியோரின் தலைமையில் தொழில் முனைவோர் மேம்பாட்டுத்திட்டம் ரூ.2.65 லட்சத்திற்கும், கருத்தரங்கத்திட்டம் ரூ.0.50 லட்சத்திற்கும் மதிப்பிடப்பட்டு இரண்டு திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

முழுநேரக் கல்வி வாயிலாக 200 பேரும், தொலைநிலைக்கல்வி வாயிலாக 1800 பேரும் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளனர். ஆய்வியல் நிறைஞர் பட்டங்களும் பலர் பெற்றுள்ளனர். 35பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். இத்துறைப் பேராசிரியர்கள் ஏறக்குறைய 500 கட்டுரைகள் வெளியிட்டுள்ளனர். பல்வேறு கருத்தரங்குகளை நிகழ்த்திவரும் இத்துறை இன்றுவரை சிறப்பான கல்விப்பணி ஆற்றிவருகிறது.

வங்கி மேலாண்மையியல் (Bank Management)

துறைத்தலைவர் : பேரா. முனைவர் எம்.ஆர். சிதம்பரம்

1989-இல் பல்கலைக்கழகத்தில் காலூன்றிய இத்துறை முதுநிலை முதல் முனைவர்பட்டக் கல்விவரை மாணவர்களுக்கு அளித்துத் திறம்பட வளர்ந்திருப்பதுடன் தொலைநிலைக்கல்வி நிலையிலும் தன்கல்விப் பணியைச் செவ்வனே ஆற்றிவருகிறது. சிறந்த தகுதியும் அனுபவமும் வாய்ந்த ஆசிரியர்களைப் பெற்ற இத்துறையில் ஏறக்குறைய ஐந்து ஆய்வுத் திட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. இரண்டு திட்டங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏறக்குறைய 200 வெளியீடுகளுக்குச் சொந்தமாகிய இத்துறை 11 முனைவர் பட்ட ஆய்வாளர்களை உருவாக்கிய சிறப்புடையது. கல்வி பயிற்றுவிப்பது மட்டுமில்லாமல் கல்வித் தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பையும் மாணவர்களுக்குப் பெற்றுத்தந்து சாதனைபடைக்கிறது இத்துறை. அயல்நாடுகளிலிருந்தும் மாணவர்கள் இத்துறைச் சார்ந்த படிப்புகளில் ஆர்வமுடன் சேர்ந்து பயின்று பட்டம் பெற்றுச் செல்வது குறிப்பிடத்தக்கதாகும். இத்துறையில் பயின்ற பலர் பலவங்கிகளில் உயர்நிர்வாகப் பொறுப்புகளில் உள்ளனர்.

நிருமச்செயலரியல் துறை (Corporate Secretaryship)

துறைத்தலைவர் : பேரா. முனைவர் பி.கே. முத்தப்பன்

தமிழகப் பல்கலைக்கழங்களிலேயே முதன் முதலாக முதுநிலை மற்றும் ஆய்வுப்படிப்புகளைக் கொண்ட நிருமச் செயலரியல் துறையைத் தோற்றுவித்தது அழகப்பா பல்கலைக்கழகமே. முனைவர் பட்டம் பெற்ற தகுதிவாய்ந்த ஆசிரியர்களைக்கொண்டு முழுநேர மற்றும் தொலைநிலைக் கல்விநிலையில் இத்துறை

தகுதியுடைய மாணாக்கர்களை ஆண்டுதோறும் உருவாக்கிவருகிறது. பல்கலைக்கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கான பயன்பெறு நிகழ்வுகளை மேற்கொண்டுவரும் இத்துறை ஏறக்குறைய 14 ஆய்வுத்திட்டங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இத்துறைக்கான 3 அறக்கட்டளைகளின் வழியே சிறப்பு விரிவுரைகள் நிகழ்த்தப்படுவதோடு முதல்தரம் பெறும் ஆய்வியல் நிறைஞருக்குத் தங்கப் பதக்கமும் ஆண்டுதோறும் வழங்கிவருகிறது. பலர் முனைவர் பட்டம் பெற்றுள்ளதும் குறிக்கத்தக்கது.

அழகப்பா மேலாண்மையியல் நிறுவனம் (Alagappa Institute of Management)

துறைத்தலைவர் : பேரா.முனைவர் எஸ். கலியமூர்த்தி

இத்துறையானது 1993 டிசம்பரில் தொடங்கப்பட்டது. பல்வேறு தொழிலகங்களை நிர்வகிப்பதற்கும், சுயமாகத் தொழில் தொடங்குவதற்கும் இன்றைய இளைஞர்களை உருவாக்கி நாளைய சமுதாயத்தை நிலைநிறுத்தத் தேவையான நிர்வாகம் குறித்த உயர்கல்வியினைத் தரத்துடன் வழங்கிவருகிறது. ஆய்வுநிலையிலும் பயிற்சி நிலையிலும் கல்வியுடன் சிறந்த வேலைவாய்ப்பினையும் நல்கி உயர்வடையச் செய்வதும் இத்துறைக்குரிய பெருமைகளில் ஒன்றாகும். முதுகலை, ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் பட்ட ஆய்வுகளையும் உள்ளடக்கியது. முழுவதும் கணினி மையத்தில் நவீனத் தொழில்நுட்ப வசதிகளுடன் காணப்படும் இத்துறை பல்வேறு ஆய்வுத் திட்டங்களை மேற்கொண்டு பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்குத் தன் பங்கை ஆற்றிவருகிறது. இத்துறையில் பயின்று பட்டம் பெற்ற பலர் அரசு மற்றும் தனியார் உயர்நிறுவனங்களில் உயர்பதவி வகிப்பது குறிப்பிடத்தக்கது.

கல்வியியல் துறை (Department of Education)

துறைத்தலைவர் பேரா. முனைவர்.பி.பிரேமா

ஆண்டுதோறும் தகுதியுடைய ஆசிரியர்கள் பலரை உருவாக்கிக் கொண்டிருக்கும் கல்வியியல் துறை 1986இல் பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டது. முழுநேரம், பகுதி நேரப் படிப்புகளின் வழியாக இத்துறையில் 156 பேர் முதுநிலைப் பட்டத்தையும், 482 பேர் ஆய்வியல் நிறைஞர் பட்டத்தினையும், 598 பேர் முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளமை குறிக்கத்தக்கது. மேலும் மாநில, தேசிய, பன்னாட்டு நிதியுதவியுடன் 30 ஆய்வுத் திட்டங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன. புத்தகங்கள், கல்வி ஏடுகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் பிற கருத்துக் கட்டுரைகள் என 402 வெளியீடுகள் இத்துறைக்கு உரியவையாகும்

உடற்கல்வியியல் துறை (Physical Education and Health Science)

துறைத்தலைவர் பேரா. முனைவர் ஏ.எம்.மூர்த்தி

அழகப்பர் பல்கலைக்கழகத்தில் 1987-ஆம் ஆண்டு இத்துறை துவங்கப்பெற்றது. இதுவரை 97 முனைவர் பட்ட ஆய்வாளர்களையும், 1600 ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர்களையும் உருவாக்கிய பெருமை இத்துறைக்கு உண்டு. மேலும் முடநீக்கியல், யோகா பட்டய வகுப்பையும் நடத்திவருகிறது.

25 ஆய்வுத்திட்டங்களை நிகழ்த்தியும் சிறப்பு உதவித்திட்டத்தின் கீழ் 25 இலட்சம் நிதிஉதவி பெற்றும், ஆய்வுப் பணிபுரிந்துவரும் இத்துறை பல்வேறு தேசியப் பன்னாட்டுக் கருத்தரங்குகளை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது.

உறுப்புக் கல்லூரிகள் (College of Education)

அழகப்பா பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரி

முதல்வர் பேரா. முனைவர் சி.ஆர். வசந்தா

1950 ஜூனில் கொடைவள்ளல் ஆர்.எம்.அழகப்பச்செட்டியார் அவர்களால் உருவாக்கப்பட்டது. இக்கல்வியியல் கல்லூரி 1975-இல் மறைந்த முன்னாள் பாரதப்பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்களின் தலைமையில் வெள்ளிவிழாவைக் கொண்டாடியது. 1985-இல் அழகப்பா பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக மாற்றப்பட்ட இக்கல்லூரி தற்போது தனது 56ஆவது ஆண்டை நிறைவு செய்த சிறப்பை உடையது. முனைவர் பட்டம் வாயிலாகப் பலநூறு கல்வியியல் ஆய்வு மாணாக்கர்களை உருவாக்கிக்கொண்டு வரும் சிறப்புமிகு கல்லூரி. ஆண்டுதோறும் தகுதிபடைத்த நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களை உருவாக்கிய இக்கல்லூரியின் மாணாக்கர்கள் ஐயாயிரத்து ஐநூறு பேர் பல்வேறு மாவட்டங்களில் ஆசிரியராகப் பணிபுரிந்து கல்வி வளர்ச்சிக்குப் பணிஆற்றி வருகின்றனர். இக்கல்லூரி மாணாக்கர்கள் சிறந்த ஆசிரியர்களாகப் பாராட்டுப்பெற்று பல்வேறு பள்ளிகளில் பணியாற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரி
(College of Physical Education)

முதல்வர் : முனைவர் செ. பெவின்சன்பேரின்பராஜ்

அழகப்பா உடற்கல்வியியல் கல்லூரி 1956 ஆகஸ்ட் 27-ஆம் நாள் மேண்மை தங்கிய மைசூர் மகாராஜா அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. தற்பொழுது உடற்கல்வியியல் வளாகம் ஏறத்தாழ 100 ஏக்கர் பரப்பளவு கொண்டதோடு டாக்டர் எம்.ராப்சன் அவர்களது அயராது உழைப்பாலும் செயலாற்றும் திறனாலும் உடன்பணியாற்றிய ஆசிரியர்களின் ஒத்துழைப்போடும் தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்தியாவிலுள்ள ஏனைய மாநிலங்களிலும் புகழ்பரப்பி முதல்நிலைக் கல்லூரியாகத் திகழ்கிறது. இந்தியாவிலேயே இக்கல்லூரிக்குத்தான் முகாம்நடத்துவதற்குரிய 10 ஏக்கர் நிலம் தொண்டிக் கடற்கரையிலுள்ளது. மேலும் தென்னிந்தியாவிலேயே இக்கல்லூரியில் தான் முதன்முதலாக இளநிலை (B.P.Ed.,) உடற்கல்விப் பட்டப்படிப்பும் மற்றும் முதுநிலை உடற்கல்விப் பட்ட மேற்படிப்பும் (M.PEd.,) தொடங்கப்பட்டன. பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் பயில்கின்ற காரணத்தினால் இக்கல்லூரி சிறிய இந்தியா (Mini India) என்றும் அழைக்கப்படும் பெருமையுடையது. அழகப்பா பல்கலைக்கழகத்தால் அங்கீகாரம் பெற்று இக்கல்லூரியின் வாயிலாக 35பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். இங்கு பயின்ற மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் உடற்கல்வி இயக்குநர்களாகவும், துணைவேந்தராகவும், உடற்கல்வியியற் கல்லூரியில் முதல்வராகவும் தங்களது தலைசிறந்த பணிகளால் கல்லூரிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் புகழ்சேர்த்துக் கொண்டிருக்கின்றனர்.

மகளிரியல் மையம் (Centre for Women's Studies)

தலைவர் : பேரா. முனைவர் கே. மணிமேகலை

அழகப்பா பல்கலைக்கழக மகளிரியல் மையமானது தமிழகத்திலேயே முதன் முதலாகப் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு ஜூன் 19, 1989-இல் துவங்கப்பட்டது. கிராமப்புறப் பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் மத்திய மாநில அரசுகளின் நலத்திட்டங்களை மக்களிடையே கொண்டு சென்று முன்னேற்றம் அடையச் செய்வதை நோக்கமாகக் கொண்டு இம்மையம் செயல்பட்டு வருகிறது. பாரதப் பிரதமரின் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2327 நபர்களுக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சியினை வழங்கித் தமிழக அரசின் பாராட்டைப் பெற்றது இம்மையம். தமிழகப் பல்கலைக்கழகங்களில் முதன்முறையாகச் சிவகங்கை மாவட்டச் சாக்கோட்டை ஒன்றியத்தில் சுயஉதவிக் குழுக்களை அமைத்த பெருமையுடையது இம்மகளிரியல் மையம். தமிழகப் பல்கலைக்கழகங்களில் முதன்முறையாகச் சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சிமுகமை மற்றும் தேசிய ஊரக வளர்ச்சி வங்கி உதவியுடன் ஏறக்குறைய 240 பெண்களுக்குத் தொழில் முனைவோருக்கான பல்வேறு பயிற்சிகளை நடத்திக்கொண்டு வருகிறது. இவர்களுள் பலர் தற்பொழுது சிறந்த தொழில் முனைவோர்களாக இருக்கின்றனர். ஓட்டுனர் பயிற்சி அளித்து 9 பெண்களை ஆட்டோ ஓட்டுனராக்கிய பெருமையுடையது இம்மையம்.

ஊரக வளர்ச்சி மையம் (Centre for Rural Development)

தலைவர் : முனைவர் பி. தர்மலிங்கம்

அழகப்பா பல்கலைக்கழகத்தில் ஏப்ரல் 2005 அன்று ஊரகவளர்ச்சி மையம் தொடங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தைச் சார்ந்துள்ள பின்தங்கிய சிற்றூர்களின் முன்னேற்றத்தை, வளர்ச்சியை மேம்படுத்துதலை நோக்கமாகக் கொண்டு இம்மையம் அமைக்கப்பட்டது. ஊரக வளர்ச்சியை மையமிட்டு இங்கு ஆய்வுகள் பல மேற்கொள்ளப்படுகின்றன. கூட்டுச்செயல்பாடு, வறுமைக்குறைப்பு, வேலைவாய்ப்பு நல்கும் ஆயத்தஆடைப் பயிற்சி மையம் போன்ற குறுகியகாலப் பயிற்சி வகுப்புகள், மரபுசார்ந்த கலைகள், ஊரக நிர்வாகம், சிறுதொழில் வளர்ச்சி குறித்த பல்வேறு ஆய்வுகளை நிகழ்த்தியும் அதன்வழிக் கிராமப்புறங்களை வளர்ச்சி அடையச் செய்தலையும் தனது நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இதில் குறிப்பிடத்தகுந்தது ஊரக இருத்தல் திட்டம் (VPP) என்பதாகும். 2005 2006 இல் துணைவேந்தர் பேரா. முனைவர் பெ. கன்னியப்பன் அவர்களின் சீரிய முயற்சியால் பல்கலைக்கழகத்தில் பயிலும் முதுகலை இரண்டாமாண்டு மாணவர்களுக்குக்

கட்டாயப் பாடமாக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் பல்வேறு சிற்றூர்களுக்குச் சென்று தங்கி, அம்மக்களின் தேவையை அறிந்து பல்கலைக்கழகத்தின் வழியாக அரசின் பார்வைக்குக் கொண்டுவர இத்திட்டம் மிக்க உதவி செய்வதாய் அமைகின்றது. மேலும் இன்று பயிலும் மாணவர்கள் இத்திட்டத்தினால் பெற்ற அனுபவத்தினைப் பிற்காலத்தில் பணியில் பொறுப்பு வகிக்கும் போது நினைவுகொண்டு இக்கிராமப்புற மக்களின் மேம்பாட்டிற்குச் சீரிய பணியாற்ற உதவும் என்ற தொலைநோக்குப் பார்வையில் துணைவேந்தர் அவர்களால் இப்பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு ஊரக வளர்ச்சி மையத்தின் மேற்பார்வையில் சிறப்புற நடத்துவருகின்றது. எம்.பி.ஏ இரண்டாமாண்டு மாணவர்களுக்கு ஊரக வளர்ச்சி பற்றிய பாடத்திட்டம் துறையிடைப் பாடமாக அமைந்துள்ளதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

திருப்பூரில் அமைந்துள்ள NIFT - TEA உதவியோடு ஆடை உருவாக்கப் பயிற்சிச் சான்றிதழ் வகுப்புகள் இரண்டு, இம்மையத்தில் தொடங்கப்பட்டுள்ளன. இதில் பயில்வோருக்கான வேலைவாய்ப்பும் திருப்பூரிலுள்ள தொழிற்சாலைகளே ஏற்படுத்தித் தருவதும் இம்மையத்தின் சிறப்புமிகு அம்சமாகும். அரசுடன் இணைந்து பல்வேறு நிகழ்வுகளில் திறம்படச் செயலாற்றி வருவதுடன் 37 கருத்தரங்குகளையும் திறம்பட நடத்தியுள்ளது. நான்கு ஆய்வுத் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. தற்பொழுது ஐந்து ஆய்வு திட்டங்களுடன் இம்மையம் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. மேலும் 5 ஆய்வுத் திட்டங்களுக்கு அனுமதி கோரியுள்ளது.

காந்தியக் கல்வி மையம் (Centre for Gandhian Studies)

இயக்குநர் (பொ) : பேரா. முனைவர் வி.எஸ்.எஸ்.கண்ணன்

2005 டிசம்பர் 10-ஆம் நாள் காந்திய மையம் தொடங்கப்பட்டது. இம்மையம் UGC யின் நிதியுதவியுடன் செயல்பட்டு வருகிறது. சத்தியாக்கிரக வழிமுறையில் உண்மையுடன், இனிமையாக அமைதியாக வாழ்வதற்கேற்ற காந்தியக் கொள்கைகளை, தத்துவங்களைப் பரப்புவது இம்மையத்தின் அடிப்படை நோக்கமாகும். பல்வேறு பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகள், நவீனக் கற்பித்தல் முறைகள் (Teleconference Programme) வழியாகக் காந்தியத் தத்துவங்கள் கற்பிக்கப்பட்டும் பரப்பப்பட்டும் வருகின்றன.

நேரு கல்வி மையம் (Centre for Nehru Studies)

தலைவர் : பேரா.முனைவர் பி.தர்மலிங்கம்

நாட்டு முன்னேற்றத்தைக் குறித்த ஜவர்ஹர்லால் நேருவின் கொள்கைகளை வெளிப்படுத்துதலை நோக்கமாகக் கொண்ட நேருகல்வி மையம் மார்ச் 2006-இல் பல்கலைக்கழக மானியக்குழுவின் ஒப்புதலோடு தொடங்கப்பெற்று ஊரகவளர்ச்சி மையத்துடன் இணைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

நானோ மையம் (Nano Centre)

நானோ அறிவியல் என்பது தற்போது உலகில் முன்னணியில் இருக்கும் அறிவியல் தொழில்நுட்பம் ஆகும். இதன்வழி மிகச் சிறிய அளவுடைய பொருள்களை அளக்க முடிகிறது. அடிப்படை அம்சங்களைப் புரிந்து கொள்ளுதலும், நானோ கருவிகளை இணைப்பதற்கான உத்திகளைப் பயன்படுத்துதலும், நானோ கருவிகளை உருவாக்குதலும் இத்துறையின் புதிய சாதனைகளாகும். இதனை மனதிற்கொண்டு அழகப்பா பல்கலைக் கழகத்தில் நானோமையம் உயிரித்தொழில்நுட்ப மையத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

உயர்கணித மையம் (Ramanujam Centre)

அறிவியல் மற்றும் பொறியியல் துறைகளில் கணிதத்தின் பயன்பாடு இன்றியமையாதது. கணித ஆய்வின் தரத்தை மேம்படுத்தவும், மிகுதியான அளவில் கணிதத்தில் திறமைவாய்ந்த மாணவர்களை உருவாக்கவும், தொழில் துறை மற்றும் தொழிற்சாலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் கணிதமேதை இராமானுசரின் பெயரால் ஸ்ரீ ராமானுஜம் மையம் இக்கல்வியாண்டில் கணிதத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மக்கள் தொகைக் கல்வி

இந்தியா பல்வேறு ஆற்றல்கள் நிறைந்த நாடு. குறிப்பாக, மக்கள் தொகையையே 'ஆற்றலாகக்' கருதும் நிலை அண்மைக் காலத்தில் உருவாகி உள்ளது. இந்நிலைப்பாட்டைப் பாடத்திட்டமாக மாற்றிக் கற்பிக்கும் ஆய்வு நிகழ்த்தும் விழிப்புணர்வு நிலையை உருவாக்குவது இந்த அமைப்பின் முக்கிய நோக்கம். இந்த அமைப்பு வயதுவந்தோர் கல்வித்துறையில் இயங்கி வருகின்றது.

பல்கலைக்கழக வரலாற்றில் தமிழ்த்துறை

தமிழ்த்துறை

தேசியத் தர நிர்ணயக்குழுவினரால் (NACC) 'ஏ' சான்றிதழ் என்னும் முதல்தரமதிப்பீட்டைப் பெற்று, இன்று அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் கைகோர்த்துக் கல்வியின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டு வளர்ந்து வரும் அழகப்பா பல்கலைக்கழகத்தின் முதல்வித்தாய் அமைக்கப்பெற்றது தமிழ்த்துறை. பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்குத் தமிழ்த்துறை இன்றளவும் தன்னால் இயன்றவரை உழைப்பதைத் தன் கடமையாகக் கொண்டுள்ளது. இத்துறை மதுரை காமராசர் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் வ.சுப.மாணிக்கனார் பணியாற்றிய பெருமையுடையது

மூத்த தமிழறிஞர்கள் வ.சுப. மாணிக்கனார், இரா. சாரங்கபாணி, கோ. சிவகுருநாதன் போன்றோர் அழகப்பா கலைக் கல்லூரித் தமிழ்த்துறையில் பேராசிரியர்களாகப் பணியாற்றி உள்ளனர். தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் அவர்கள் தலைமையில் தமிழ் உயர்ஆய்வு மையமும் செயல்பட்டுள்ளது. இத்தகையோர் அரும்பணியால் தழைத்தோங்கிய முதுகலைத் தமிழ்ஆய்வு, அழகப்பா பல்கலைக்கழகம் தோன்றவித்தாக அமைந்தது.

1985-இல் அழகப்பா பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டபோது தமிழ்த்துறைத் தலைவராகப் பேரா.கோ. சிவகுருநாதன் அவர்கள் பொறுப்பேற்றார்கள். தொடர்ந்து முனைவர் அ. விசுவநாதன், முனைவர் தே. சொக்கலிங்கம், முனைவர் இரா.பாலசுப்பிரமணியன் (on lien) ஆகியோர் துறைத் தலைவர்களாகத் திகழ்ந்தனர். தற்போது முனைவர் மு.பாண்டி துறைத்தலைவராகப் பணியாற்றி வருகின்றார். இத்துறையில் பேரா. வெ.சு. அழகப்பன், பேரா. இராம. இராமநாதன், பேரா.இரெ. பிச்சைக்கண்ணு, ஆகிய தமிழறிஞர்கள் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளனர். தற்பொழுது முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை, முனைவர் சு. இராசாராம், திரு.மு. நடேசன், முனைவர் மு. சுதா, முனைவர் இரா. தாமோதரன் ஆகியோர் பணியாற்றி வருகின்றனர். இப்பேராசிரியர்கள் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரைகளும், நூல்களும், இலக்கியப் படைப்புகளும் பல்வேறு பரிசுகளைப் பெற்றுள்ளன. பல்கலைக்கழகங்களில் பாடநூல்களாகப் பயிற்றுவிக்கப்பெற்று வருகின்றன.

தமிழ்த்துறை அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகத் திருமதி. கரு. ஜெயாவும் அலுவலக உதவியாளராகத் திரு. ந. செந்தில்சாதனும் பணியாற்றி வருகின்றனர்.

முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர் எனும் மூன்று பட்டங்களுக்குரிய மாணவர்களும், ஆய்வாளர்களும் தமிழ்த்துறையில் பயின்று ஆய்வுநிகழ்த்தி வருகின்றனர். முதுகலைப் பாடத்திட்டத்தில் 'கோயிற்கலை' தனி ஒரு பாடமாகக் கற்பிக்கப்பெற்று வருகின்றது. முதுகலை மாணவர்கள் இந்து, இஸ்லாம், கிறித்துவம் என ஏதேனும் ஒரு சமயம் சார்ந்த கோயிலை மையமிட்டுக் களஆய்வு வழித் தரவுகளைத் திரட்டித் திட்டக்கட்டுரை வடித்தளித்தல் வேண்டும். இதனால், இன்று

நூற்றுக்கும் மேற்பட்ட கோயில்களின் வரலாறு இத்துறைவழி ஆவணப்படுத்தப்பெற்றுள்ளது. பண்டைய பல்லவ, பாண்டிய, சோழ மன்னர்காலத்திய சிற்பக்கலை, கட்டடக்கலை நுணுக்கங்கள் கண்டறியப் பெற்றுள்ளன. சில அரிய செய்திகள் மீட்டுருவாக்கம் செய்தளிக்கப்பெற்றுள்ளன. கோயில்களில் நடைபெற்று வரும் விழாக்கள் வழித் தமிழ்ப்பண்பாட்டுச் சமயமரபுகளில் காணலாகும் பெரு-சிறு மரபுகளுக்கான வேர்நிலை கண்டறியப்பெற்றுள்ளது. இந்து - இசுலாம் - கிறித்துவம் எனும் சமய வழிபாட்டு முறைகளில் காணலாகும் சில உட்பிணைப்புகளும் வெளிக்கொணரப்பெற்றுள்ளன. இவற்றால் மாணவர்களின் ஆய்வு மனப்பான்மை மற்றும் திறனாய்வுப் போக்கை வளர்ப்பதுடன், பழமையை, பண்பாட்டைப் பாதுகாக்கும் ஆய்வுத்துறையாகவும் தமிழ்த்துறை திகழ்கிறது. இந்த ஆய்வுகளில் பல நூல்களாகவும் வெளிவந்துள்ளன.

இது போன்றே சங்க இலக்கியம், இலக்கணம், நாட்டுப்புறவியல், இதழியல் தொடர்பான ஆய்வுகளிலும் இத்துறை தனிக்கவனம் செலுத்தி வருகின்றது. ஒப்பிலக்கியத் திறனாய்வு, மொழிபெயர்ப்பு போன்ற ஆய்வுகளிலும் மாணவர்களை ஈடுபடச் செய்து பல்துறைப்பட்ட அறிவை வளர்க்கவும் ஆவண செய்து வருகிறது. இப்பாடத்திட்டம் வழிப் பயின்ற மாணாக்கர்களுக்குப் பல்கலைக்கழக மானியக்குழுவின் தேர்வுக்கான முறையான பயிற்சி அளிக்கப்பட்டு அத்தேர்விலும் பல்கலைக்கழக மானியக்குழுவின் நிதியுதவிக்கான (JRF) இளநிலை ஆய்வாளர் தகுதிகாண் தேர்வில் தேர்ச்சி பெற்று நிதியுதவியுடன் ஆய்வு செய்து வருகின்றனர். மேலும் பாரத முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி பெயரில் மத்திய அரசு வழங்கும் ஆய்வு உதவித் தொகையை ஐவர் பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிட்டு நினைக்கத்தக்கது. விரிவுரையாளர் தகுதிகாண் (Lecturership) தேர்வில் 25-க்கும் மேற்பட்டோர் தேர்ச்சியடைந்துள்ளனர். மாநில அரசு நடத்தும் விரிவுரையாளர்தேர்விலும் (SLET) பல்வேறுமாணவர்கள் தேர்ச்சியடைந்துள்ளனர்.

பல்கலைக்கழக மானியக்குழு நிதியுதவி பெற்றோர் (JRF)

- ✠ பெ. வெள்ளைச்சாமி
- ✠ மு. சுதா
- ✠ சி. சிதம்பரம்
- ✠ க. அமுதா
- ✠ இரா. குமார்
- ✠ அ. சங்கர்தாஸ்
- ✠ அழ. பூபதி
- ✠ ஆர். தாமரைச்செல்வி

பாரத முன்னாள் பிரதமர் இராஜீவ்காந்தி நிதியுதவி பெற்றோர்

- ✠ கரு மணிமேகலை - முனைவர் பட்ட ஆய்வாளர்
- ✠ சொ. பிரேமா - ஆய்வியல் நிறைஞர்
- ✠ த. புனிதவதி - ஆய்வியல் நிறைஞர்
- ✠ பி. தென்றல் - ஆய்வியல் நிறைஞர்
- ✠ எம். தேன்மொழி - ஆய்வியல் நிறைஞர்

தமிழ் பயில ஆர்வமுடைய பிறதுறை மாணவர்களுக்குத் (Inter Diciplinary) தமிழ்க்கல்வி அளித்துத் தமிழின் சிறப்பைப் பிறர் உணர வழிசெய்து வருகிறது.

இன்றைய அறிவியல் யுகத்தில் இணையதளத்தின் வழி உலகம் கண்முன் வந்து நிற்கிறது. தமிழ் இலக்கியத்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. தமிழ்த்தேனை இணையத்தின் வழி அறியச்செய்து இணையக் கல்வி அறிவை வளர்ப்பதுடன், அது தொடர்பான கருத்தரங்குகளையும் துறையில் நடத்தி மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

தமிழாய்வுத் துறையில் வாரந்தோறும் வியாழவட்டம், வெள்ளிவட்டம் எனும் இரு இலக்கியச் சந்திப்பு நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இச்சந்திப்புகளின் வழி மாணவர்களின் பேச்சாற்றல், படைப்பாற்றல், எழுத்தாற்றல், கூர்மைப்படுத்தல் போன்ற திறன்கள் வளர்க்கப்பெற்று வருகின்றன. பல்கலைக்கழகத்தை நாடிவரும் மாணவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வண்ணம் தேசியக் கருத்தரங்குகள் நடத்தப்பெறுகின்றன.

அவை வருமாறு :

- தமிழ்த்துறை ஞாலத் தமிழ்ப்பண்பாட்டுக் கழகம் இணைந்து நடத்திய தேசியக் கருத்தரங்கம்.
- சிலப்பதிகாரக் கருத்தரங்கம்.
- நாட்டுப்புறவியல் கோட்பாட்டுக் கருத்தரங்கம் (பல்கலைக்கழக நிதியுதவி)
- இணைப்புக் கல்லூரித் தமிழாசிரியர்கள் கலந்து கொண்ட அழகப்பா பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் முதற்கருத்தரங்கு (18 செப்டம்பர் - 2005)
- இணையம் வழிப் பயிலும் முறை பற்றிய சிறப்பு வகுப்புகள் இணையப் பல்கலைக் கழகத்தின் மூலம் நடத்தப்பெறுகின்றன.

அறிஞர் பலரின் வருகையின்போதைய சந்திப்புகளுக்கு அப்பால், கருத்தரங்க நிகழ்வுகளுக்கு அப்பால் 13 அறக்கட்டளைச் சொற்பொழிவும் அறிஞர்களின் பெயர்களில் தொண்டுள்ளம் வாய்ந்த நல்லோர் உதவியுடன் ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றன.

அவை வருமாறு :

1. டாக்டர் ரெ. முத்துக்கணேசனார் மணிவிழா அறக்கட்டளை
2. வி.ஆர்.எம். செட்டியார் - மது.ச. விமலானந்தம் அறக்கட்டளை
3. இராஜயோகி ஸ்ரீ வள்ளியப்பச் செட்டியார் அறக்கட்டளை
4. இராஜயோகி ஸ்ரீ வள்ளியப்பச் செட்டியார் - ஸ்ரீஅரவிந்தர் யோக அறக்கட்டளை
5. முனைவர் ச. மெய்யப்பன் அறக்கட்டளை
6. பேரா. ந. சுப்புரெட்டியார் திருமதி. செல்லப்பாப்பா அம்மாள் அறக்கட்டளை
7. முனைவர் வ.சுப. மாணிக்கனார் அறக்கட்டளை
8. பேரா. இராம.இராமநாதன் திருமதி. ருக்மணி இராமநாதன் மணிவிழா அறக்கட்டளை
9. தெ.கி.தெ.தேனப்பச்செட்டியார் நினைவு கம்பராமாயணச் சொற்பொழிவு அறக்கட்டளை.

10. கவிக்கோ பூ. அமிர்தலிங்கனார் நினைவு அறக்கட்டளை

11. சைவப் பெரியார் வி.ஆர்.கே. இராமநாதன் செட்டியார் அறக்கட்டளை

12. தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அறக்கட்டளை

13. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அறக்கட்டளை

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பெயரால் தமிழக அரசு வழங்கிய நிதியுதவியினைக் கொண்டு கற்றுத் துறைபோய அறிஞர்கள் கலந்து கொள்ளும் பாவேந்தர் பாரதிதாசன் கருத்தரங்கு சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. தமிழர்களின் ஆன்மீகநெறி, சமுகவாழ்க்கை, கலாச்சாரம், பண்பாடு, நுண்கலைகள் ஆகியவைகளின் மையமாகத் திருக்கோயில்கள் திகழ்கின்றன. கட்டடக்கலை மட்டுமன்றி, சிற்பம், நடனம், இசை, ஓவியம் முதலிய கலைகள் வாழ்வதற்கும் சமுதாயப் பணி நடைபெறுவதற்கும் இக்கோயில்கள் மைய இடமாக அமைகின்றன. பெருமிதத்திற்குரிய நம் நாட்டின் பெருமைமிக்கப் பண்பாட்டை, ஆன்மீக இழையோடும் நன்மரபை, கலைகளின் இருப்பிடத்தை, ஒருமித்துக்கொண்டுள்ளன திருக்கோயில்கள். இக்கோயில்கள் தொடர்பான ஆய்வினை, முதுகலை ஆய்வாக முதன்முதலாக இத்தமிழ்த்துறை மேற்கொண்டு வருகிறது. மேலும் சிறப்புச் சேர்க்கும் இடமாகத் திருக்கோயில் பற்றிய தேசியக் கருத்தரங்குகளை நிகழ்த்திவருவது குறிக்கத்தக்கது.

சிங்கப்பூர், இலங்கை போன்ற வெளிநாட்டு மாணவர்களும் இத்தமிழ்த்துறைப் பாடத்திட்டத்தைத் தொலைநிலைக்கல்வி வழிப் பயின்று பட்டம் பெற்று வருகின்றனர். இதுவரை முதுகலை, ஆய்வியல் நிறைஞர் பட்டங்களைத் தொலைநிலைக் கல்வி வழிப் பயின்றோர் எண்ணிக்கை மூவாயிரத்தைத் தாண்டுகிறது. கோயிற்கலைப் பாடம் பெரும்பட்டயச் சான்றிதழுக்குரியதாகப் பயிற்றுவிக்கப்பெற்றது இப்பல்கலைக்கழகத்தில் மட்டுமே. தொலைநிலைக்கல்வியின் வாயிலாக மாணவர்கள் தமிழ்ப் புலமைபெற வகைசெய்து அதற்கான எளிமையான பாடத்திட்டங்களையும் துறைப்பேராசிரியர்கள் வகுத்தளித்துள்ளனர். தமிழ்த்துறை ஆசிரியர்களின் நூல்கள் தொலைநிலைக்கல்விக்குரிய பாடநூல்களாக ஏற்கப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தகுந்தது. இளங்கலை, முதுகலை மட்டுமல்லாது ஆய்வியல் நிறைஞர் பட்டக்கல்வியையும் அளித்து அழகப்பா பல்கலைக்கழகத்தின் கல்விப்பணியில் தன் பங்கையும் சிறப்புற ஆற்றிவருகிறது.

பல்கலைக்கழக மையநூலகத்திலும், தமிழ்த்துறை நூலகத்திலும், ஆயிரக்கணக்கில் தமிழ்நூல்கள் உள்ளன. அறிஞர்கள் இராய.சொக்கலிங்கம். வ.சுப.மாணிக்கம், இராம.இராமநாதன் ஆகியோர் சேகரித்து வைத்திருந்த நூல்களும் நன்கொடையாகப் பெற்றுப் பாதுகாக்கப்பெற்று வருகின்றன. இச்சேகரிப்பில் அரிய நூல்கள் பல உள்ளன. இத்தமிழ்த்துறையில் பயின்று ஆய்வு நிகழ்த்திப் பட்டம் பெற்றோர் இன்று பல்வேறு கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும், பள்ளிகளிலும், பிறதுறைகளிலும் பணியாற்றி வருகின்றனர். பல நல்ல உயர்பதவி நிலையை அடைந்துள்ளனர்.

எதிர்காலத்திட்டம்

துணைவேந்தர் மற்றும் பதிவாளர் அவர்களின் அறிவுரைகளுடன் துறையை மேம்படுத்துவதற்கான எதிர்காலத்திட்டங்கள் பல .தீட்டப்பெற்றுப் பல்கலைக்கழகத்திடம் பணிக்கப்பெற்றுள்ளன. அவை வருமாறு :

- ஆய்வு இருக்கை (Research Chair) ஒன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- செம்மொழித் திட்டத்தின் வழி அரசின் நன்மைகளை மாணவர்கள் பெறவும், ஆய்வு வளரவும் ஏற்பாடுகள் செய்யப் பெற்றுள்ளன.
- இந்திய மொழிகள் ஆய்வு நிறுவன உதவியுடன் கருத்தரங்குகள் பயிலரங்குகள் நடத்தத் திட்டமிட்டுள்ளது.
- தமிழ்த்துறை என்பதனை விரிவாக்கித் தமிழ் மற்றும் இந்திய மொழிகளின் துறையாய் மாற்றப் பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டு இதன் வழியாய் ஒப்பிலக்கியத்துறை என்ற தனித்துறையை ஏற்படுத்த வழி மேற்கொள்ளப்படும்.
- கோயிற்கலை தொடர்பான பெருஞ்சான்றிதழ் பட்டயப்படிப்பு மீண்டும் தொடர நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
- முதுகலை மாணவர்களின் கவிதை, கட்டுரை, புதினம், சிறுகதை போன்ற படைப்பிலக்கியத் திறனை வளர்க்கச் சிறப்புப் பயிற்சி அளித்தல்.
- பாடத்திட்டத்தில் கணினி, இணையம், தகவல் தொழில்நுட்பக் கருவிகள் மூலம் மாணவர்களுக்குக் கல்வி அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
- விருப்பப்பாடங்களைத் தெரிவு முறையில் மாணவர்களின் தற்திறனை மதிப்பிட்டுக் கல்வியியல் நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.
- பல்கலைக்கழக வளாகத்திற்குள் நடத்தப்பெறும் மாணவர்களுக்கான வேலை வாய்ப்புகளைப் பெற்றுத்தரும் நேர்முகத்தேர்விலும், (Campus Interview) மானியக்குழு நடத்தும் தகுதிகாண் தேர்விலும் கலந்து கொள்வதற்கான பயிற்சியும் ஊக்கமும் அளித்தல்.
- மாணவர்கள் மற்றும் துறைப்பேராசிரியர்களின் ஒத்துழைப்புடன் தமிழ்த்துறையைத் தன்னிகரற்றத் துறையாய் அழகப்பா பல்கலைக்கழகத்தின் ஆணிவேராய்த் திகழும்படி வளர்ச்சியை ஏற்படுத்துதல்.

தமிழாய்வில் தமிழ்த்துறை

முனைவர் பட்டம் பெற்றோர்

1991	இரா. மணிகண்டன்	தமிழில் அவையடக்கப் பாடல்கள்
1991	வேலாயுதஉடையார் முத்துலக்குமி	பண்டைத் தமிழ் இலக்கியங்களில் அறநெறிகள்
1996	செ.சௌரிராஜ்	சிவசங்கரி புதினங்களில் பெண்கள்
1998	சு.இராசாராம்	சங்க இலக்கியங்களால் அறியலாகும் நடைமுறை வாழ்க்கை
1998	சே. செந்தமிழ்ப்பாவை	சங்கப் பாடல்களில் மரபு மாற்றங்கள்
1999	இ.மேரி	வீரமாமுனிவரின் உரைநடை நூல்கள் ஓர் ஆய்வு
1999	இரா.கருணாநிதி	அப்துல் ரகுமான் கவிதைகள் ஓர் ஆய்வு
2000	சா.இரமேசு	சங்க இலக்கியத்தில் ஊர்ப் புனைவுகள்
2002	ஆ. திலகம்	கொங்கு வேளாளக் கவுண்டர்களின் பழக்கவழக்கங்கள் திண்டுக்கல் மாவட்டம்.
2002	பூ.மஞ்சுளவல்லி	சிவசங்கரியின் நாவல்களில் குடும்ப உறவுகள்
2003	ஜெயராஜ்	இயற்பியற் கலைச் சொற்கள்
2005	வை.இராமராச பாண்டியன்	தமிழ்ப்புறம் (எட்டுத்தொகை)
2005	இரா.குமார்	அகநானூற்றில் கருத்துப்புலப்பாட்டுநெறி
2006	இரா. இளங்கோ	சிவங்கை மாவட்டக் கிராம வழக்கு மன்றங்கள்
2006	இரா.ரேணுகாகாந்தி	சங்க இலக்கியத்தில் இற்செறித்தலும் உடன்போக்கும்
2006	க. அமுதா	சங்க இலக்கியப் பெண்பாற் புலவர்கள்
2006	மு. பஞ்சவர்ணம்	சங்க இலக்கியத்தில் புழங்கு பொருட்கள்
2006	இரா.சற்குணம்	குன்றக்குடி ஆதீனத் தமிழ்ப்பணி
2006	கே.கண்ணாத்தாள்	விக்ரமன் நாவல்களில் பெண்கள்
2007	க.சொல்லேருழவன்	தொல்காப்பியம், சங்க இலக்கியம் - தலைவி கூற்று ஒப்பீடு
2007	ப.சு.செல்வமீனா	சங்க இலக்கியத்தில் குற்றங்களும் தண்டனைகளும்.

முனைவர் பட்ட ஆய்வேடு பணித்துள்ளோர்

1. அ. சங்கர்தாஸ் - தமிழ்க் காப்பியங்களில் பெண்ணியம்
2. சோ. முத்தமிழ்ச்செல்வன் - சங்க இலக்கியத்தில் நெஞ்சொடு கிளத்தல்

தற்போதைய முனைவர் பட்ட ஆய்வாளர்கள்

முனைவர் இரா.பாலசுப்பிரமணியன் (on Lien) - நெறியாளர்

பிரதீபாதேவி (முழுநேரம்) - பண்டைத் தமிழரின் நலவாழ்வியல்
திருவேணி (பகுதிநேரம்) - கலைஞரின் தொல்காப்பியப் பூங்கா
காளைராஜன் (பகுதிநேரம்) - திருப்புவனம் கோயில் ஓர் ஆய்வு
தியாகராஜன் (பகுதிநேரம்) - குன்றக்குடிஆதினத்திற்கு உட்பட்ட திருக்கோயில் ஓர் ஆய்வு

முனைவர் மு. பாண்டி - நெறியாளர்

கரு. மணிமேகலை (முழுநேரம்) - சங்க இலக்கியத்தில் துனியுறு கிளவி (எட்டுத்தொகை)
ஆறு. முத்துக்கருப்பன் " - பரணர் ஔவையார் பாடல்களில் உள்ளப்போராட்டம்
அழ. பூபதி (பகுதிநேரம்) - தமிழ்க் காப்பியங்களில் கிளைக்கதைகள்
இளசை எஸ்.சுந்தரம் " - வானொலி வளர்த்த தமிழ் (1975 - 1984)
எச். முகமது சலீம் " - தக்கலை ஷெய்கு பீர் முகமது அப்பாவின் ஞானப்புகழ்ச்சியில் பெண்மை நலம் பேசும் கூறுகள்
கே. இராஜலெட்சுமி " - சோலை சுந்தரப்பெருமாளின் படைப்புகளில் மண்ணும் மக்களும்
சு. பழனிமுத்து " - சு.சமுத்திரம் சிறுகதைகள்
எம். ரமேஷ்பாபு " - இன இதழ்கள்
க.மோகன் " - ஊடல் அன்றும் இன்றும்

முனைவர் செந்தமிழ்ப்பாவை - நெறியாளர்

ஆர். தேவணன் (முழுநேரம்) -. சங்க கால மக்கள் வாழ்வியலில் விலங்குகள்
து. இரவிக்குமார் " - சங்கப் பாடல்களில் பெயர்க்குறியீடுகள்
நா.புவனேஸ்வரி " - சங்க அகப்பாடல்களில் காலம்
ச. கணேஷ்குமார் " - சங்க இலக்கியத்தில் களன்
இரா. குணசீலன் " - சங்க இலக்கியத்தில் ஒலிக்கூறுகள்
சு. கார்த்திகேயன் " - சங்ககால மக்களின் கடல்சார் வாழ்வியல்
எச். மீனாட்சி (பகுதிநேரம்) - தமிழ்நாவல்களில் விடுதலைப்போராட்டம்
க. காயத்ரி " - பெருங்கதையின் இலக்கியக்கொள்கை

முனைவர் சு. இராசாராம் - நெறியாளர்

சி. பரமேஸ்வரி	(முழுநேரம்)	-	தமிழ் அகஇலக்கணங்களில் கூற்றுமுறை ஒப்பீடு
இரா.தாமரைச்செல்வி	"	-	துறையாசிரியர்களின் உரைநடை
எஸ். அழகுமாலா	"	-	தொல்காப்பிய உரையாசிரியர்களின் காலவுரை
டி.கண்ணன்	"	-	இலக்கியத்தில் திணைமயக்கம்
ஜெ. ஆல்பர்ட்	"	-	சங்க இலக்கியத்தில் நலம் பாராட்டல்
கே.ஆர்.முருகன்	(பகுதிநேரம்)	-	சிங்கப்பூர் தமிழ்ச்சிறுகதைகள் (1965 - 2005)
க.லெட்சுமி	"	-	விக்ரமனின் சிறுகதைக் கலை
இரா. விமலன்	"	-	சிங்கப்பூர்த் தமிழ்க்கவிஞர் க.து.மு.இக்பாலின் கவிதை வளம்

ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றோர்
சங்க இலக்கியம்

ஆண்டு	பெயர்	ஆய்வேட்டின் தலைப்பு
1988	ச.மெய்யம்மை	ஔவை சு.துரைசாமிப் பிள்ளையின் உரைத்திறன்
1990	இ.ஆல்வி	போரழிவுப் பாடற்புனைவுகள்
1990	சா. இரமேஷ்	அகப்பாடல்களில் செவிலி
1990	சு. இராசாராம்	சங்க அகப்பாடல்களில் கண்டோர் கூற்று
1992	சே.செந்தமிழ்ப்பாவை	மருதப் பாடல்கள் ஒப்பீடு (ஐங்-கலி)
1994	கு. தவசீலன்	பரத்தையர் காமக்கிழத்தியர் கூற்று
1994	மா. சடையன்	சங்க இலக்கியத்தில் அகம்பாடிய அரசர்கள்
1994	ம. பிலோமினம்மாள்	சங்க இலக்கியத்தில் புறம்பாடிய அரசர்கள்
1995	சே. அழகம்மை	அகமும் புறமும் பாடிய அரசர்கள்
1995	ஸ்ரீ. சித்ரா	சங்கப் பெண்பாற் புலவர்தம் அணித்திறன்
1997	வீ.கலைச்செல்வி	நெய்தற்பாடல்கள் ஒப்பீடு (ஐங் - கலி)
1998	க. செல்லேருழவன்	சங்க அக இலக்கியங்களில் பாணன்
1998	இரா.குமார்	சங்ககால மதுரைப் புலவர் பாடல்கள்

1999	இரா.இரேணுகாகாந்தி	அகப்பாடல்களில் குறையுற உணர்தல்
1999	மு.பஞ்சவர்ணம்	முல்லைப்பாடல்கள் ஒப்பீடு
1999	கரு. சமத்துவம்	இடந்தலைப்பாடு
1999	சி. சிதம்பரம்	உறையூர்ப் புலவர்கள்
1999	வே.திருநீலகண்டபூபதி	சங்க அகப்பாடல்களில் உவகை
1999	அழ. பூபதி	மகட்பாற் காஞ்சித்துறை ஆய்வு
2000	வெ.தனலெட்சுமி	குறுந்தொகையில் உடன்போக்கு
2000	ம.முத்துப்பாண்டியன்	பாலைப்பாடல்கள் ஒப்பீடு (ஐங்-கலி)
2000	பசு.செல்வமீனா	கரூர்ப்புலவர்கள்
2000	சி.பரமேஸ்வரி	உலோச்சனார் பாடல்கள்
2000	வை.இராமராசபாண்டியன்	புறநானூற்றில் பொதுவியல்
2000	கரு.மணிமேகலை	மாமூலனார் பாடல்கள்
2001	க.அல்லிராசன்	சங்கஇலக்கியத்தில் நகை
2001	அ.அமல்ராஜன்	குறுந்தொகையில் தலைவி கூற்றுகள்
2001	வை. சாந்தாராமன்	சங்க இலக்கியத்தில் உறுப்பால் பெயர்பெற்ற புலவர்கள்
2001	சி.இந்திரா	சங்க இலக்கியத்தில் பரிசில் கடாநிலையும் பரிசிற்றுறையும்
2001	இரா. தாமரைச்செல்வி	சங்க இலக்கியத்தில் வாயில் மறுத்தல்
2001	கோ.புவனா	சங்க இலக்கியத்தில் சிறைப்புறக் கூற்றுகள்
2002	க.திருவாசகம்	சங்க மகளிரும் தொழில்களும்
2002	வே. சண்முகம்	சங்க அக இலக்கியத்தில் வெறியாட்டு
2002	சி.மோகனவள்ளி	கயமனார் பாடல்கள் ஓர் ஆய்வு
2002	இரா.இராதா	சங்க இலக்கியத்தில் பகற்குறி
2002	அ. இராஜா	எட்டுத் தொகையில் சகுனங்கள்
2002	ச.பொன் ஜெயந்தி	சங்க இலக்கியத்தில் ஐம்புலன் உணர்வுப் புனைவு (குறிஞ்சித்திணை)
2002	மு. ஜெயமணி	இயன்மொழித்துறை
2003	காளிமுத்து	பேரிசாத்தனார் - ஓர் ஆய்வு

2003	இரா.கோதை	கபிலர் அகப்பாடல்களில் பின்னோக்கு உத்தி
2003	ந. கற்பகம்	சங்க இலக்கியங்களில் தந்தை - ஓர் ஆய்வு
2003	செ. கருப்பையா	தொண்டை நாட்டுப் புலவர் பாடல்கள்
2003	து. இரவிக்குமார்	புறநானூற்றில் ஐம்புலன் உணர்வுப்புனைவு
2003	வீ. சுமதி	பெருங்குன்றூர் கிழார் பாடல்கள் ஓர் ஆய்வு
2003	இரா.குணசீலன்	சங்க இலக்கியத்தில் ஒலிக்கூறுகள் (பத்துப் பாட்டு மட்டும்)
2003	செ. துரைமுருகன்	பொருண்மொழிக் காஞ்சித்துறை ஆய்வு
2003	நா. புவனேஸ்வரி	மாங்குடி மருதனாரின் புறப்பாட்டுத்திறன்
2003	மு. சாவித்திரி	முல்லை நில மக்கள் வாழ்வியலில் விலங்குகள்
2003	ச. கணேஷ்குமார்	அகநானூற்றில் பருவப்புனைவு
2003	து. புவனேஸ்வரி	சங்க இலக்கியங்களில் குறுநில அரசர்கள்
2004	சொ. மணிமேகலை	மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்
2004	கரு. முருகன்	குடவாயிற் கீரத்தனார் அகப்பாடல்திறன்
